JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா


அனுதினமும்

2016 மார்ச்
54 வது வெளியீடு




## இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தார்!

அட்டைப் படத்தின் கதை உட்புறத்தில்...!







# அட்டைப்பட விளக்கம்




## அன்பார்ந்த தேவ பிள்ளைகளே!




இம்முறை ஜீவ மன்னா தின மஞ்சரியின் அட்டைப்படக் கதைக்கூடாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் மற்றைய மாதங்களை விட மிக விஷேசித்ததாகும். ஏனெனில் பெரிய வெள்ளியன்று எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்து எங்கள் பாவங்கள் காரணமாக சிலுவையிலே அறையப்பட்டு எமக்காக அவரையே பலியாக ஒப்புக் கொடுத்தார். மீண்டுமாக மூன்றாம் நாள் மரணத்தை வென்று மரித்தோரிலிருந்து எழும்பினார்.

"...இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது என (எபிரேயர் 9:22)இல் கூறப்பட்டுள்ளதன் பிரகாரம் உலகில் அனைத்து மனிதர்கள் நிமித்தமாக பாவத்திற்கு சம்பளம் செலுத்தவும், மரணம் எனும் தண்டனையிலிருந்து எம்மை மீட்கவும்



இயேசுகிறிஸ்து எங்களுக்காக சிலுவையில் தன்னுயிரை அர்ப்பணித்து பலியாகினார். யூதர்களின் சட்டத்தின்படி பாவம் செய்த மனிதனுக்கு கொடுக்க வேண்டிய மிகக் குறைந்த இறுதி தண்டனையான கசையடிகள் 39இன் வேதனையை அநுபவித்து அவரது சரீரத்தின் மாசற்ற கடைசித் துளி இரத்தம் வரை எமக்காகவே சிந்தினார். பரிசுத்த வேதாகமத்தில் 1யோவான் 1:7இல் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும், தேவன் எங்களை மரணம் எனும் தண்டனையிலிருந்து மீட்பதற்கு சிலுவையில் அறையப்பட்டு மரணித்தது மட்டுமின்றி இயேசுகிறிஸ்து மரணத்தை வென்று மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இப்படியாக மகிமையடைந்த தேவன் "...இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன்" என்று கூறினார். (பரி.மத்தேயு 28:20) இப் பொருத்தனையின்படி இன்றும் எங்கள் மத்தியில் ஜீவிக்கின்றவராக வாசம் பண்ணுகிறார்.



தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததை நினைவு கூறுவதே பாஸ்குத் திருநாள். இப்படியாக தேவன் அன்று மரணத்தினின்று மீண்டுமாக உயிர்த்தெழாவிட்டால் இன்று கிறிஸ்தவ மதத்தை உலகில் காண முடியாது. உலகில் பிறந்தது

☞ அட்டைப்படத்தின் பின்பக்கத்தில் உட்புறத்தில் பார்க்கவும்.

# மகிமை இயேசு ராஜனுக்கே

## ஆசிரியர் உரை

## மரணத்தை வென்ற இயேசுகிறிஸ்து இன்றும் எம்மோடு!

### கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். ஜீவ மன்னா தின மஞ்சரியின் 54வது வெளியீட்டின் மூலம் உங்களைச் சந்திக்கின்றேன். எங்களை இவ்வளவு தூரம் கொண்டு வந்த ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவை முழு உள்ளத்தோடும், ஆவியோடும் ஆராதித்து கௌரவப்படுத்துகின்றோம். இம்மாதத்தில் உலகில் விஷேசித்த, ஆச்சரியமான நிகழ்வொன்று நிகழ்ந்தது என்பதை நினைவு கூருகின்றேன்.

முழு உலகத்தையும் வியப்பில் ஆழ்த்திய உலக சரித்திரத்தில் முதலிடத்தை பெற்றுக் கொண்ட மிக பிரல்பயமான நிகழ்வு ஆகிய முழு உலகினையும் சிருஷ்டித்த பிதாவானவரின் ஒரே பேறான குமாரன், இரட்சகர் இயேசுகிறிஸ்து உலகின் அனைத்து மானிடர்க்காகவும் சிலுவையில் தியாகமாக தனது வாழ்வை அர்ப்பணித்து மரித்து மூன்று தினங்களில் மரித்தோரிடமிருந்து உயிர்தெழுந்ததேயாகும்.

அன்பார்ந்தவர்களே! ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் அனைவரும் இயேசுவை விசுவாசித்து அவருடைய சிலுவைத் தியாகத்தின் காரணமாக கறைதிரையற்ற பரிசுத்த பிள்ளைகளாகவிருக்கின்றோம். ஏனென்றால் பரி.லூக்கா 2:11இல் இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் என இயேசுகிறிஸ்துவின் பிறப்பை தேவ தூதன் கூறியுள்ளதன்படி 33½ வருடங்களுக்கு பின்னர் இப்படியான மகா உன்னத தியாகமொன்று உலகில் நிகழ்ந்து மூன்றாம் நாள் மரணத்தைவென்று தேவன் மரித்தோர்க்கிடையே மீண்டுமாக உயிர்த்தெழுந்தார். இந்த ஜீவ மன்னாவிற்கூடாக அநேக ஆத்துமாக்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்தறிந்து இரட்சிக்கப்படுவதற்காக ஜீவ மன்னா வாசகர்களாகிய நீங்கள் அனைவரும் அதி தீவிரமாக செயற்பட வேண்டுமென நான் உங்களிடம் கேட்பதோடு இன்னும் எதிர் வரும் காலங்களிலும் எம்மோடு கரம் கோர்த்து இந்த தேவ காரியங்களுக்காக ஒத்தாசை நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் இணையற்ற**
**கருணையும் சமாதானமும் உங்களோடிருப்பதாக!**

இரட்சகர் உலகில் பிறந்த நாளில்
இகமதில் மாந்தர் களிப்புற்றார் அந் நாளில்
இயேசுகிறிஸ்து நமக்காக மரித்தார் ஒரு நாளில்
இவ்வுலகம் வியந்திட உயிர்த்தெழுந்தார் மூன்றாம் நாளில்!

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
**இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

ஜீவ மன்னா
மார்ச்
**01** செவ்வாய்

# மாம்சத்தின்படி செயல்படாமல் தேவ ஆவியானவருக்கு கீழ்படியுங்கள்!

வேதவாசிப்பு
ஓசியா
அதி: 01 - 02

**"மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்."**
(ரோமர் 8:8)

அன்பு தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உதயமாகிய புதிய மாதத்தின் முதல் நாளில் உங்களை உளமாற வாழ்த்துகின்றேன்.** இன்றும் வாழ்வில் நன்மைகளான காரியங்களே நடைபெறுவதாக உலகில் அனைத்து ஜாதிகளின் மத்தியில் தேவனை ஆராதிக்கும் ஜனங்களாக எங்களை அவருக்கென்றே வேறுபிரித்துக் கொண்டமையினால் **நாம் மிகவும் விஷேசித்தவர்களாவோம்**! ஏனெனில் உலகில் சுமார் 700 கோடி ஜனங்கள் மத்தியில் **இந்த பாக்கியத்தைப் பெற்ற நீங்களும், நானும் ஆசீர்வாதம் பெற்றவர்களாவோம்.**

தேவ பிள்ளைகளே! ஆகையால் உள்ளங் கலங்காதிருங்கள்! மேலே கூறப்பட்ட **ரோமர் 8:8**இல் எழுதப்பட்டுள்ளதாவது **"மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்"** என்றாகும். **பரிசுத்த ஆவியானவரின் சுபாவம் என்பது தேவனுக்குள் ஜீவிப்பதாகும்.** உதாரணமாக எடுத்துக் கொண்டால் தம்மையே சார்ந்து தமது சொற்களுக்கு கீழ்படியும் பிள்ளைகளுக்கு பெற்றோர் அன்பு செலுத்துவார்கள். அப்படியே **தேவனின் சத்தத்திற்கு கீழ்படிகின்ற பிள்ளைகளுக்கு தேவன் மிகச் சமீபமாகவிருக்கிறார்.** ஆகையால் ஆவிக்குரிய தேவ பிள்ளைகளான நீங்கள் தேவனைப் பிரியப்படுத்த உங்கள் ஒவ்வொரு காரியத்திலும் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையை தேவனிடம் ஒப்புக் கொடுத்து அவரை நோக்கிய வண்ணமாயிருங்கள். உங்கள் சொந்தத் திறமை அல்லது கல்வியறிவு, அல்லது சுயபெலன் என்பவற்றைச் சிந்திக்காது, தேவனோடே இணைந்து அவரைச் சார்ந்து இருப்பீர்களாயின் தேவன் உங்கள் பேரில் மிகவும் பிரியமாய் இருப்பார்.

தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவை உங்கள் வாழ்வில் ஏற்றுக் கொண்ட நாளில் தேவ ஆவியானவர் உங்களுக்குள் வாசம் பண்ண வந்திடுவார். இயேசுகிறிஸ்துவுக்குள் இருந்த தேவனின் ஆவியானவர் இப்பொழுது உங்களுக்குள் வாசம் பண்ணுவதால் நீங்கள் மாம்சத்தில் அல்ல ஆவியில் இருக்கின்றீர்கள்.** ஆகையால் உண்மையிலேயே நீங்கள் தேவனை பிரியப்படுத்துபவராக இருக்க வேண்டும். இன்று முதல் நீங்கள் ஆவியில் தேவனைத் தேடவும் தேவனை நமஸ்கரிக்கவும் தேவ இராஜ்யத்திற்காக் **அர்ப்பணித்த சேவை செய்யவும் உள்ளத்தில் வைராக்கியங் கொள்ளுங்கள்.** தேவனை பிரியப்படுத்தி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். **வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் இயேசுவே! உங்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்ட நான் மாம்சத்தில் அன்று ஆவியில் ஜீவிக்க வேண்டுமென்பதை நான் அறிந்திருக்கிறேன். தேவனே நீங்கள் எனக்கு உபகாரம் செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல."
(ரோமர் 8:9)

ஜீவ மன்னா
மார்ச்
**02** புதன்

## மனித சிந்தனைகளுக்கு மேலான தேவ கிருபை!

வேதவாசிப்பு
ஓசியா
அதி: 03 - 04

**“எரிகோவை வேவுபார்க்க யோசுவா அனுப்பின ஆட்களை ராகாப் என்னும் வேசி மறைத்துவைத்தபடியினால், அவளையும் அவள் தகப்பன் வீட்டாரையும் அவளுக்குள்ள யாவையும் யோசுவா உயிரோடே வைத்தான்; அவள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கிறாள்.”** (யோசுவா 6:25)

தேவனுக்குள் பிரியமான அன்பு தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினால் தேவனின் அநுக்கிரக நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனாகிய கர்த்தர் மனிதர்களை அளவில்லாமல் நேசிக்கிறவராய் தராதிரம் பார்க்காத ஒரே தேவனாவார். ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! **யோசுவா 6:25**இல் எழுதியுள்ளதென்னவெனில் **“எரிகோ எனும் நகரில் வாழ்ந்த ராகாப் எனும் வேசியைக் குறித்தாகும்.” சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு இருந்த போதும் அவளது ஒரு கிரியையின் நிமித்தம் அவளுக்கு தேவனின் மகா இரக்கம் கிடைத்தது.** யோசுவாவிற்கு தேவன் கொடுத்த செய்தியின் பிரகாரம் எரிகோ நகரை கைப்பற்றும் முகமாக இஸ்ரவேல் மனிதர்கள் இரண்டு பேரை வேவு பார்க்கும்படி எரிகோவிற்கு அனுப்பினார்கள். யோசுவா அவர்களிடம் நீங்கள் போய் தேசத்தையும், எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் போய் **“ராகாப்”** எனும் பெயர் கொண்ட வேசியின் வீட்டில் தங்கினார்கள். தேசத்தை வேவு பார்க்கும்படி இஸ்ரவேல் புத்திரரில் சில மனுஷர் இந்த ராத்திரியிலே இங்கே வந்தார்கள் என்று எரிகோவின் ராஜாவுக்குச் சொல்லப்பட்டது. எரிகோவின் ராஜா **ராகாபண்டைக்கு ஆள் அனுப்பி வேவு பார்க்க மனிதரை வெளியே கொண்டு வரும்படியாக கட்டளையிட்டான். அவர் அவர்களை வீட்டின் மேல் ஏறப்பண்ணி வீட்டின் மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள். அதன் பிறகு இரகசியமாக அவர்களை வெளியேறச் செய்தாள்.**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் அவள் எரிகோவை கைப்பற்றும் நாளில் (அவள் அவர்களுக்கு இரங்கியபடியால்) அவளுடைய முழுக் குடும்பத்தையும் பாதுகாத்து அவர்களது உயிரை மரணத்தினின்று காப்பாற்றுவதற்கு ஆணையிட்டதன்படி **தேவனின் நாமத்தில் ஒரு அடையாளத்தை கேட்டு பெற்றுக் கொண்டாள். (அவள் சிவப்பு நிற நூல் கயிற்றை ஜன்னலின் கட்டி வைத்தாள்)** அவளது வேண்டுகோளின்படி எரிகோவை கைப்பற்றிய போது **தேவனுடைய கருணை அவளுக்கும் அவள் குடும்பத்தினருக்கும் கிடைத்தது.** மனிதர்கள் பாராமுகமாயிருப்பினும் தேவனின் இரக்கமோ ஒரு போதும் குறையாது முழு உள்ளத்தோடு தேவனுக்கு ஏதாவதொன்றைச் செய்யுங்கள். **கிருபை நிறைந்த மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! மனிதன் பார்ப்பதைப் போன்று என்னைப் பார்க்காத தேவன் என்பதால் ஸ்தோத்தரிக்கின்றேன்! உங்களுக்காக முழு உள்ளத்தோடு ஏதாவதொன்றைச் செய்ய எனக்கு கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“இரங்கிக் கடன்கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.” (சங்கீதம் 112:5)

ஜீவ மன்னா
மார்ச்
**03** வியாழன்

# மாம்சத்தின் கிரியைகளை மேற்கொள்ளும் ஒரு இரகசியம்!

வேதவாசிப்பு
ஓசியா
அதி: 05 – 06

**"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்."** (ரோமர் 8:13)

பிரியமான என் தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ளவரும், நித்திய ஜீவனை எமக்களிப்பவரும் இயேசு என்னும் தூய நாமத்தை உடையவருமான தேவன் இன்றைய நாளிலும் ஆசீர்வதிப்பார் என வாழ்த்துகின்றேன்.** இன்றைய தினத்தில் இவ் ஜீவ மன்னா நாளிதழை படிக்கும் நீங்கள் இலங்கை வாழ் ஜனங்கள் மத்தியிலே **தேவனுடைய சொந்த பிள்ளைகளாக தெரிந்துக் கொள்ளப்பட்ட அதிர்ஷ்டசாலிகளாயிருக்கிறீர்கள்!** எம்மை உயர்த்துவதாக வாக்களித்த தேவன் இன்று எம் வாழ்வினை வளம்படுத்தி உயர்த்த செயல்புரிகிறார். **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

தேவ பிள்ளைகளே! **உலகிலே ஆத்மீகர்களாக வாழும் எமக்கு உலகின் மற்ற மனிதர்களைப் பார்க்கிலும் அதிகமான மனக் கஷ்டங்களும் சரீர பிரகாரமான உபத்திரவங்களும் உண்டு என நான் நினைக்கிறேன்.** நீங்களும் அவ்வாறே எண்ணக் கூடும். எம் சரீரம் ஒரு கூடாரமாகும். அதிலே நாம் ஜீவிக்கின்றோம் உலகிறகு ஒளியாக வந்த **இயேசுகிறிஸ்துவை நாமும் உலகிற்கு ஒளியாக விளங்கும்படியாக எம்மை அவரிடம் அழைத்துக் கொண்டார். தூய ஆவியானவரை எமக்களித்தார். ஆவியானவர் எம்மில் வாசம் பண்ணுகிறபடியால் எம் மாம்சமான சரீரத்தின் கிரியைகளை ஆண்டவர் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார்.** ஆயினும் உலகில் அந்தகார வல்லமைகளின் கிரியைகள் எமக்கு விரோதமாக அதிகமாய் செயல்படுகிறது. இதனால் தான் எமக்கு மானசீக உபத்திரவங்களும், சரீரப் பிரகாரமான கஷ்டங்களும் ஏற்படுகிறது.

தேவனுடைய பிள்ளைகளே! **சாத்தானுடைய கிரியைகளினால் எம் மாம்சம் தேவனுக்கு விரோதமாக கிரியை செய்ய முற்படுகிறது. ஏனெனில் மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது.** நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.. என **கலாத்தியர் 5:17**இல் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் "**தேவ ஆவியானவரின் வல்லமையால் நாம் எந்நேரமும் நிறைந்திருக்க வேண்டும் என இதனால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது." கிறிஸ்துவுக்குள் புதிதாய் பிறந்த நாம் மாம்சத்தின் கிரியைகளை ஜெயம் கொள்ளும்படியாக விஷேசித்த வல்லமையை பெற்றிருக்கிறோம்.** இயேசுவை அண்மித்து, வாஞ்சித்து மேலும், மேலும் வல்லமையை அதிகரித்துக் கொள்வோம். **சந்தோஷத்தின் நாள்!**

ஜெபம்

என் பரலோக தேவனே! ஆவியால் நிறைந்திருக்கும் போது மாம்சத்தின் கிரியைகளை ஜெயம் கொள்ள முடியும் என அறிந்தேன். நானும் உங்கள் பாதத்தில் தரித்திருந்து ஆவியின் வல்லமையால் நிரம்ப தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."
(ரோமர் 6:23)

**ஜீவ மன்னா**
**மார்ச்**
**04** வெள்ளி

## நீங்கள் பிதாவின் வல்லமையை பெற்றுக் கொண்டவர்கள்!

**வேதவாசிப்பு**
ஓசியா
அதி: 07 – 08

**"ஒருவன் என் பிதாவின் அருளைப்பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்."**
(பரி.யோவான் 6:65)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ளவரும் எம் மத்தியில் வாசம் பண்ணுகிறவருமாகிய **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு ஜெயம் தரும் நந்நாளாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன்.** இயேசுகிறிஸ்துவின் பிள்ளையாக விளங்கும் **நீங்கள் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவராவீர்கள்!** ஏனெனில் **உலக வாழ் சுமார் 700 கோடி மக்கள் மத்தியில் அவரது சொந்த பிள்ளையாகும்படியாக வரப்பிரசாதம் கிடைத்தது பெரும் பாக்கியமாகும்.** ஆகையால் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!

பிரியமான தேவ பிள்ளைகளே! மேலே காணப்படும் தேவ வாக்கியம் **பரி.யோவான் 6:65**இல் சொல்லப்படுகிறது **"ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதனிமித்தமே உங்களுக்குச் சொன்னேன்"** என்றாகும். அப்படியாயின் நாம் **இயேசுவின் பிள்ளைகளாயிருப்பது பரம பிதாவின் சொந்த விருப்பத்தின்படி எம்மை தெரிந்துக் கொண்டபடியினாலாகும்** என்பது தெளிவாகிறது. நீங்கள் பெற்றுக் கொண்ட இவ் உன்னத வரப்பிரசாதத்தை அலட்சியமாய் எண்ணாதிருங்கள். **சில வேளைகளில் எமக்கு ஆசீர்வாதங்கள் கிடைக்க தாமதமாகலாம். எம் ஜெபங்கள், விண்ணப்பங்களுக்கு பதில் கிடைக்காதிருக்கலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் உங்கள் உள்ளம் வேதனைப்படுவது, கவலைப்படுவது விசுவாசம் தளர்வது போன்ற காரியங்கள் எம் ஆத்துமாவை பின் மாற்றமடையத்தக்கதாக வழியை அமைத்துக் கொடுக்க ஆரம்பிக்கலாம்.**

தேவ பிள்ளைகளே! எம் தராதரத்தைப் பாராதவரும் எம் அறிவாற்றலை பாராதவரும், இனம் தகுதி செல்வாக்கு, செல்வம் இவைகளை எண்ணாதவரும் எம்மை தம் பிள்ளைகளாகும்படியாக தெரிந்துக் கொண்டவருமான **பரலோகத்தின் தேவன் எம்மீது எவ்வளவு அன்புக் கொண்டுள்ளார்?** என்பதை சற்று சிந்திப்போம்! தம் சொந்த மகனை எமக்காய் சிலுவையில் இரத்தப் பலியாக ஒப்புக் கொடுத்தவரும் அவரது பரிசுத்த இரத்தத்தால் எம் பாவங்களையும், சாபங்களையும் நீக்கி இரட்சித்தார் என்றால் **அவர் எம் ஜீவியத்தைக் குறித்து எவ்வளவு கரிசனையுள்ளவராய் இருக்கிறார்? அப்படியாயின் ஏற்ற வேளையில் எம்மை ஆசீர்வதிக்க தேவன் அறிந்தவராயிருக்கிறார். நீங்கள் எதைக் குறித்தும் கவலைப்படாது இயேசுகிறிஸ்துவை முழு உள்ளத்தோடு ஏற்று அன்பு கூர்ந்து வாழுங்கள். ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் இயேசுவே! உங்கள் மகனின் ஆலாசனையில் வழி நடத்த வல்லமையளித்தவரே நன்றி! என் வாழ்வினிலே நான் சந்திக்க வேண்டிய துன்பங்கள், பிரச்சினைகள், கஷ்டங்களினால் நாம் பின்மாற்றமடையாதபடி தயைபுரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்."
(பரி.யோவான் 1:12)

ஜீவ மன்னா
மார்ச்
05 சனி

# சர்வ வல்லவரின் நிழலில் தங்குவோர்!

வேதவாசிப்பு
ஓசியா
அதி: 09 – 10

**"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்." (சங்கீதம் 91:1)**

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவனின் பெரிதான கிருபையிலே இன்றைய நாளிலும் ஆசீர்வாதமான நாளைப் பெற்றுக் கொண்ட **உங்களை முழு உள்ளத்தோடு வாழ்த்துகின்றேன்.** இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஒவ்வொரு நாளும் வாழ்த்துக்களைப் பெறும் **நீங்கள் மிக அதிர்ஷ்டசாலிகள்! அப்போஸ்தலர் நடபடிகள் 4:12**இல் **"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"** என்றான். என எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! ஆகையால் இயேசுகிறிஸ்துவை அறிந்து **அவருடைய நாமத்தை விசுவாசிக்கும் நீங்கள் மிக அதிர்ஷ்டசாலிகள்** அல்லவா? ஆகையால் **உள்ளங் கலங்காதீர்கள்!** மேலே **சங்கீதம் 91:1**இல் எழுதப்பட்டுள்ளதாவது **"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்."** என்றாகும். எங்கள் தேவன் சர்வ வல்லவர். அவர் எங்களை ஆதி தகப்பனாகிய ஆபிரகாமின் தேவன் ஏனென்றால் **"ஆபிரகாமுக்கு 99 வயதான போது கர்த்தர் தரிசனமாகி நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு"** என்று கூறினார். **(ஆதியாகமம் 17:1)** ஆகையால் அநேக ஜாதிகளுக்கு உன்னை தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி **(ரோமர் 4:17) "ஆபிரகாமின் தேவனான சர்வ வல்லமை படைத்த பராக்கிரம தேவன் எங்களது தேவனாக இருக்கின்றார்."**

தேவ பிள்ளைகளே! ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் தேவனைக் குறித்து **எவ்வளவு தேவபயம், கௌரவம், பக்தி, உள்ளவர்களாக வாழ வேண்டும். ஆனாலும் பெரும்பாலான ஆத்மீக பிள்ளைகள் கூட தம்மை பக்தி மிக்கவர்களாக காட்டிக் கொண்டிருக்கிறதை பழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாம்ச கிரியைகளில் மாத்திரமே காட்டுகின்ற பக்தி, தேவபயம், கௌரவம், என்பவைகளை தேவன் விரும்புவதில்லையென** எழுதப்பட்டுள்ளது. ஆனாலும் நீங்கள் முழு உள்ளத்துடனும் தேவ ஆவியைக் குறித்த தாகத்தோடு தேவனுக்குள் இருப்பீர்களெனின் நீங்கள் தேவனின் நிழலில் வாழ்பவராக நிச்சயமாக இருக்கின்றீர்கள். உங்கள் வாழ்வு பாதுகாக்கப்படும். **ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் சர்வ பராக்கிரமுள்ள தேவனாவீர்கள் உங்கள் ஆவியோடு இணைந்து உங்கள் நிழலில் வாழ்ந்து உங்கள் பாதுகாப்பைப் பெற எனக்கு கிருபை செய்யுங்கள்.
இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்; என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."
(எரேமியா 31:14)

ஜீவ மன்னா
மார்ச்
**06** ஞாயிறு

## உங்கள் இளமைப் பருவத்தில் விசுவாசிகளுக்கு முன் மாதிரியாக இருங்கள்!

வேதவாசிப்பு
ஓசியா
அதி: 11 – 12

**"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு."**
(1 தீமோத்தேயு 4:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் எமது விண்ணப்பங்களுக்கு மேலாக சிந்தனைகளுக்கு அதிகமாக கிரியை செய்கின்ற தேவன் இன்றைய நாளில் உங்களை வழி நடத்தும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஆவிக்குரிய பிள்ளைகள் அன்பின் நிமித்தம் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ வேண்டுமென்பதை பிரதான வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. **தேவன் எங்களுக்கு நித்தியமாக அன்பு செய்கின்ற தேவனாவார். தேவனது அன்பு அவரது ஒரே பேறான சொந்த மகனுக்கூடாக வெளிப்பட்டது. இன்றும் தேவனது அன்பு மாறாததாக இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களுக்கு வெளிப்படுத்துகிறார்.**

தேவ பிள்ளைகளே! **பரலோக தேவனின் அன்பு எப்படிப்பட்டதெனின் இன்றும் எம் வாழ்வில் அற்புதமானவைகளை, மகத்துவமானவைகளை தேவன் கிரியையில் செயல்படுத்துகிறார்.** என்னுடைய பெற்றோர் இப்பொழுது உயிரோடு இல்லை ஆனாலும் அவர்களது அன்பை ஒரு போதும் மறக்க முடியாது. எனது சகோதரிகள், உறவினர்கள் எவ்வளவு பேர் இருந்தாலும் அவர்கள் காட்டுகின்ற அன்பு எனது பெற்றோர் காட்டிய அன்புக்கு சமனாகாது. **அதைப் போன்று அதிலும் பார்க்க எனது தேவன் காட்டுகின்ற அன்புக்கு இந்த உலகின் ஒன்றுமே ஈடாகாது.**

தேவ பிள்ளைகளே! தேவனின் அன்பை நான் அறிந்துக் கொண்ட முதல் நாளிலிருந்து இதுவரை **எனக்கு அவரது அன்பு அளவின்றி கிடைத்தது. நான் துக்கத்தோடு, வேதனையுடன் இருக்கின்ற எல்லா வேளையிலும் அவரது வசனத்திற்கூடாக எனது உள்ளத்தை ஆறுதல்படுத்துகிறார். நான் பிரச்சினைகள், உபத்திரவங்கள், வேதனைகள் என்பவற்றோடிருக்கையில் தேவன் எனக்கு வழி காட்டி, அவை அனைத்திலுமிருந்து ஜெயம் பெற உதவி செய்கின்றார். நான் ஜெபிக்கின்ற போது தேவன் என் குரல் கேட்டு எனக்கு பதில் கொடுத்து அற்புதமானவைகளை, வல்லமையானவைகளை என் வாழ்க்கையில் எனது ஊழியத்தில் தேவன் நிகழ்த்துகின்றார்.** தேவன் இவ்வளவாக எனக்கு உதவி செய்கின்றமையால் நானும் தேவனின் அன்பை வெளிப்படுத்துகிறேன். நீங்களும் தேவனின் அளவற்ற அன்பை உணருகின்றமையால் உங்களின் மூலமாக மற்றவர்கள் **தேவ அன்பைக் காண உதவி செய்யுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் அன்பின் தேவன் உங்கள் அளவற்ற அன்பை எனக்கு காட்டுகின்றீர்கள். உங்களுக்கு அன்பு செய்து வாழ்ந்து உங்கள் அன்பிற் கூடாக மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக வாழ கிருபை செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை." (1 யோவான் 2:10)

ஜீவ மன்னா
மார்ச்
**07** திங்கள்

**உங்கள் இருதயங்களின் சிந்தனைகள விட தேவனை விசுவாசியுங்கள்!**

**வேதவாசிப்பு**
ஓசியா
அதி: 13 – 14

**"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, "** (நீதிமொழிகள் 3:5)

அன்பான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தால் உங்களுக்கு இந்நாள் நல்ல நாளாக அமைவதாக என பிரார்த்திக்கின்றேன்.** தேவன் உங்களுக்கு காட்டும் அன்பு உன்னதமானதும் உயர்ந்ததுமாகும். அவருடைய அன்புக்கு பாத்திரவாளிகளாக இருப்பது **பெரிய வரப்பிரசாதமும், பேரதிர்ஷ்டமுமாகும்.**

தேவ பிள்ளைகளே! **"எம் எதிராளியாகிய பிசாசனவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்களாமோ என்று வகைத் தேடிச் சுற்றித்திரிகிறான்."** உலக மனிதர்களை விட ஆத்மீகர்களாகிய எம்மை அழிக்கும்படி அவன் எந்நேரமும் முயற்சிகளை மேற் கொள்கிறான். இதனிமித்தம் எம் உள்ளங்களை கலங்கச் செய்யவும் ஆத்மீக வழியிலிருந்து எம்மை வெளியே கொண்டு வரவும், எம்மை வழி தப்பி செல்லும்படியாகவும், ஆத்மீக பாதையில் பின் மாற்றமடையவும், **எம் இருதயங்களின் அனேக சிந்தனைகளை தாண்டி விட்டு எம் உள்ளத்தை வேதனைப்படுத்துவான். அவனது ஒரே நோக்கம் எம்மை அனுதினமும் அவனது சூழ்ச்சி வலையில் சிக்க வைத்து எம்மை அழிவுக்கு இழுத்துக் கொள்வதேயாகும்.** ஆயினும் எம்மை அளவில்லாமல் நேசிக்கும் இயேசு இரட்சகர் உலகிற்கு வந்தது பிசாசனவனுடைய கிரியைகளை அழித்து எம்மை அவனடமிருந்து மீட்டு **எமக்கு நித்திய ஜீவனை பெற்றுத் தரவும். எம் வாழ்விற்கு ஜெயத்தை தரவுமேயாகும்.**

தேவ பிள்ளைகளே! மேலே கொடுக்கப்பட்ட வசனத்தில் **நீதிமொழிகள் 3:5**இல் **"உன் சுய புத்தியின் மேல சாயாமல் உன் முழு இருதயத்தோடும் கர்த்தரின் நம்பிக்கையாயிருந்து"** என்பதாக. இதன்படி ஒரு உதாரணத்தை கூறுகிறேன். உங்களுக்கு மிகப் பெரிய கடன் பிரச்சினை ஒன்று ஏற்படும் போது இக் கடன் பிரச்சினையிலிருந்து வெளியே வருவது எப்படி என்று **உங்கள் உள்ளத்திலே அனேக வழி முறைகளை குறித்து நினைத்துக் கொண்டிருப்பீர்கள்.** உங்கள் ஆத்ம நண்பர்கள் அனேக யோசனைகளை உங்கள் முன் வைத்திருப்பார்கள். **நீங்கள் என்ன செய்வீர்களென்பதை உள்ளத்திலே குழம்பிப் போய் தேவ வார்த்தைகளுக்கு விரோதமாகவோ, தேவ சித்தத்திற்கு விரோதமாகவோ செய்திருப்பீர்களாயின் உங்கள் உள்ளம் சமாதானத்தை இழந்து போகும்.** ஆகையால் நீங்கள் சுயபுத்தியின்படி செய்யாது தேவனை நம்பி அவரது விருப்பப்படி செய்யுங்கள். அப்போது தேவன் சகல பிரச்சினைகளையும் முடித்து விடுவார். **விடுதலையின் நாள்!**

**ஜெபம்**

என் அன்பின் பிதாவே! திருக்குமாரன் மூலம் என் மீது தேவரீர் என் மீது கொண்ட அன்பிற்காய் நன்றி! உங்கள் அன்பு உன்னதமானபடியாலும் எம்மைக் குறித்த உங்கள் திட்டம் பெரிதானபடியால் நன்றி! தேவன் தாமே எம்மை ஆசீர்வதித்து வழி நடத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதிமொழிகள் 3:6 )

ஜீவ மன்னா
மார்ச்
**08** செவ்வாய்

# நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மேலாக அதிகமாய் ஆசீர்வதிக்கும் தேவன்!

வேதவாசிப்பு
யோவேல்
அதி: 01 – 02

**"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு,"** (எபேசியர் 3:20)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ***ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உன்னத தேவ அழைப்பைப் பெற்றிருக்கும் நீங்கள் இன்றைய நாளில் மனமகிழ்ச்சியுடன் திகழ வாழ்த்துகின்றேன்.*** பரலோகத்தில் வாசம் பண்ணும் சிருஷ்டித்த கர்த்தருக்குச் சொந்தமான **நாம் ஒவ்வொருவரும் உண்மையிலேயே ஆசீர்வாதம் பெற்றவர்களாவோம்.** ஏனெனில் தேவன் சர்வ பராக்கிரமமுள்ளவர் இன்றும் அவரது பிள்ளைகளுக்கு அளவற்ற அன்பைப் பொழிந்து **ஆசீர்வதிப்பாராக!**

தேவ பிள்ளைகளே! எங்களை தேவன் தமது சாயலாகவும் தனக்குச் சமநிலையிலும் உருவாக்கினார். ஆனாலும் **இவ்வுலகில் பாவங்கள் பிறந்தபடியால் மனிதனது தெய்வீக சுபாவம் இல்லாமல் போய்விட்டது.** ஆகையால் மனிதர்களாகிய எங்கள் உள்ளத்தின் நினைவுகளும், கொள்கைகளும் பெரும்பாலும் **சுயநலமாகவே இருக்கின்றதென்று நாம் அனைவரும் அறிவோம்.** ஆனாலும் தேவன் எவ்வளவு பரந்த மனப்பான்மையுடையவரென்றபடியால் நாங்கள் அவரின் பிள்ளைகளாக யாதொன்றையாவது கேட்கிற வேளையில் அதை தருவது தேவனின் பிரியமெனின் **"நாங்கள் வேண்டிக் கொள்கிறதற்கு மேலாக நினைக்கிறதற்கு மேலாக எங்கள் காரியங்களை ஆசீர்வதிக்கும் தேவனாவார்."** மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான தேவ வசனத்தில் கூறப்பட்டுள்ளதாவது, தேவன் நாம் வேண்டிக் கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் அதிகமாக கிரியை செய்கிற **வல்லமையுடையவராயிருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! உலகில் பெரும்பாலான மனிதர்கள், தன்னைக் குறித்து மாத்திரமே சிந்தித்து, ***ஏனைய மனிதர்களைக் குறித்துச் சிந்தியாமல் தியாக சிந்தனைகளோடு மற்றவர்களுக்கு உதவி செய்யாது வாழ்கிறார்கள்.*** ஆனாலும் சிலர் பரந்த மனப்பான்மை, தியாக மனம், பொது நலம் என்பனவற்றை தன்னகத்தில் கொண்டு உலகில் வாழ்வதையும் அறிகின்றோம். எல்லாவற்றிலும் பார்க்க **தனது ஒரே பேறான திருக் குமாரனை எங்களுக்காக பலியாக அர்ப்பணித்த தேவன், எங்களை தனது சொந்த பிள்ளைகளாக வேறுபிரித்த தேவன், எங்களை மனிதர்களைப் பார்க்கிலும் சிந்திப்பது நிச்சயமே தேவன் மனிதனல்ல என்பதால் எவ்வளவு தியாகமுள்ள உள்ளத்தை உடையவராக இருப்பார் என சிந்தித்துப் பாருங்கள்.** தேவன் தனது அபிஷேகத்தையும், ஆசீர்வாதத்தையும் ஊற்றுவதற்காக எம்மை நோக்கிய வண்ணமாக இருக்கின்றார். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் வல்லமையான தேவனாவீர்கள். உங்கள் வல்லமை அளவற்றது நான் வேண்டிக் கொள்கிறதற்கு மேலாக நினைக்கிறதற்கு மேலாக நீங்கள் என்னை ஆசீர்வதித்து உங்கள் நாமத்தை மகிமைப்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்."
(சங்கீதம் 146:5)

**ஜீவ மன்னா**
**மார்ச்**
**09** புதன்

# கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஜெயங் கொடுக்க வல்லவர்!

**வேதவாசிப்பு**
யோவேல் 03
ஆமோஸ் 01

**“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.”** (1 கொரிந்தியர் 15:57)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் இன்றும் உங்களுக்கு வெற்றிச் சிறந்த நந்நாளாக அமைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** உலகிலே கிரியை செய்யும் அந்தகார வல்லமையின் ஆளுகையின் நிமித்தம் ஆத்மீகர்களுடைய வாழ்விலே **அநேக போராட்டங்கள், நோய்கள், பிரச்சினைகள், துன்பங்கள் போன்றவைகளை சந்திக்க வேண்டியதாய் உள்ளது. ஆயினும் சாத்தானுடைய சகல அதிகாரங்களையும் மேற் கொள்ளவும் சகலவற்றிலும் எமக்கு வெற்றியை பெற்றுத் தரவும் எம் சிருஷ்டிகரான கர்த்தர் எம்மோடிருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! பரி.பவுல் அடிகளார் **1கொரிந்தியர் 15:57** கூறுகிறார். **“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!”** என்று. ஆகவே **உங்கள் இருதயங் கலங்காதிருப்பதாக!** மனிதனுக்குள் அநீதி பெருகினபடியால் கடவுளை விட்டு அவன் தூரமாய்ப் போனான். ஆயினும் எம் பரலோகப் பிதாவாகிய தேவன் மனிதன் அழிந்து போவதை விரும்பாதவராய் மறுபடியும் தம் அண்டையில் சேர்த்துக் கொள்ளும்படியாக அவனை அழைக்கும் பொருட்டு தமது **சொந்தக் குமாரனையே உலகிற்கு கொடுத்தார். அவர் மூலமாக அவரது பரிசுத்த இரத்தத்தினால் மனிதர்களுடைய சகல பாவங்களையும் கழுவி தூய்மையாக்கி, நீதிமான்களாக்கினார். பின்னர் பரலோகப் பிதாவிற்கும் மனிதர்களுக்கிடையில் தகப்பன், பிள்ளைகள் என்று உறவு முறையான சொந்தத்தை உருவாக்கிக் கொடுத்தார்.**

தேவ பிள்ளைகளே! **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக மரணத்தை ஜெயங் கொண்டு சாத்தானை முறியடித்தார்.** ஆகையால் கிறிஸ்துவுக்குள் வாழும் சகலரும் அவர் மூலமாகவே ஜெயம் பெற்றோராய் இருக்கிறோம். **இன்றைய நாளிலும் உங்கள் வாழ்க்கை பூஜ்ஜியமாகவே இருக்கிறது என எண்ணி வேதனைப்பட்டு கலங்காதிருங்கள்!** இஸ்ரவேலுக்கு ஒரு ஆசாரியனை தெரிந்துக் கொள்ளும்படியாக **“இஸ்ரவேல் கோத்திரத்தின்படி பன்னிரெண்டு கோல்கள் கர்த்தருடைய கட்டளைப்படி சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் மோசே வைத்ததன் மறுநாள் சாட்சியின் கூடாரத்துக்குள் மோசே பிரவேசித்த போது லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது அது துளிர் விட்டு பூப்பூத்து வாதுமைப் பழங்களைக் கொடுத்தது”** என வேதத்தில் **எண்ணாகமம் 17:8**இல் கூறப்பட்டுள்ளது. **அப்படியாயின் தோல்வியடைந்து போன உங்கள் வாழ்வினை தேவன் வெற்றியினைப் பெற்றுத்தர தர வல்லவராவார். ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் பரலோக தேவனே! இயேசுகிறிஸ்துவின் மூலம் சாத்தானின் தலையை நசுக்கி உங்கள் வல்லமையை எமக்களித்து கிறிஸ்துவினாலே ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்! இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே. ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“அநுக்கிரக காலத்திலே நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சணியநாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள்.”
(2 கொரிந்தியர் 6:2)

ஜீவ மன்னா
மார்ச்
10 வியாழன்

**உம்முடைய வேதத்தை நேசிப்பவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு!**

வேதவாசிப்பு
ஆமோஸ்
அதி: 02 – 03

**“உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.”** (சங்கீதம் 119:165)

அன்பான தேவ பிள்ளைகளே! மரணத்தை ஜெயம் கொண்ட வருமான **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கும் இன்றும் ஜெயம் தரும் நாளாக மாற வாழ்த்துகின்றேன்.** ஆண்டவர் எம்மை அளவுக்கடந்த அன்பினால் நேசிக்கிறார். **அவரது அன்பு ஒரு போதும் மாறாதது. நாம் ஜீவிக்கின்ற தேவனை அறியாதவர்களாய், பாவிகளாய் இம் மண்ணிலே வாழ்ந்துக் கொண்டிருந்தோம்.** ஆயினும் தேவன் எங்களை பெயர்ச் சொல்லி தம்மிடமாய் அழைத்துக் கொண்டார். **அன்றுதொட்டு இன்று வரை சகல ஆசீர்வாதங்களையும் எமக்கருளுகிறார்.**

தேவனுடைய பிள்ளைகளே! **அவர் எம்மை மிகவும் நேசிக்கிறபடியால் ஒரு போதும் கைவிட மாட்டார். எமக்கு பிரச்சினைகள், இன்னல்கள், இடையூறுகள், துக்கங்கள் நேரிடும் வேளைகளில் எமக்கு உதவி ஒத்தாசைகள் செய்வது மட்டுமின்றி அதிலிருந்து விடுதலையும் அளிக்கிறார்.** ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** மேலே தரப்பட்ட வேத வசனத்தின்படி உம்முடைய வேதத்தை நேசக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை எனக் கூறுப்பட்டுள்ளது. இந்த வார்த்தையானது தேவனுடைய கட்டளைகளாகும். அவருடைய வார்த்தைகளை நேசிக்கிறயாவரும் சமாதானமடைவார்கள் என **சங்கீதம் 119:165**இல் கூறுகிறது. **“அவர்களுடைய ஆத்மீக பயணத்தில் விழுந்து போக மாட்டார்கள். அவர்கள் பயணம் தடையின்றி தொடரும்.”**

தேவ பிள்ளைகளே! இதைக் குறித்து **நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?** சில ஆத்மீகர்கள் நான் இயேசுவை மிகவும் நேசிக்கிறேன் என்று கூறிக் கொண்டு அவரது ஒரு வார்த்தையைக் கூட மனதில் கொள்ளாமற் மனம் போன போக்கிலே வாழ்கிறதை நான் கண்டிருக்கின்றேன். எம் பிதாவாகிய கர்த்தர் தம் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பியதன் மூலம் தம் அன்பை எமக்கு வெளிப்படுத்தினார். இயேசுகிறிஸ்து கூறுகின்றார் **“என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனோ என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான் நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்”** என்றார். அவ்வாறே நீங்கள் இயேசுகிறிஸ்துவை நேசிப்பீர்களேயானால் அவரது கற்பனைகளை நேசிக்கிறவர்களாயிருப்பீர்களாயின். அப்போது உங்கள் வாழ்விலே சமாதானம் நிலைபெறும். **வெற்றியின் நாள்!**

ஜெபம்

ஜீவனுள்ள தேவனே! உங்களுடைய அன்பை எமக்கு உணர்த்த உங்கள் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பி உம்மை நேசிக்க கற்பனைகளை கைக் கொள்ள, வேதத்தை நேசித்து தியானித்து உமக்கு பிரியமான வாழ்வை வாழ கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்.” (சங்கீதம் 119:1)

ஜீவ மன்னா
மார்ச்
11 வெள்ளி

# இயேசுவின் அன்பை எடுத்துக் காட்டாகக் கொண்டு ஜீவியுங்கள்!

வேதவாசிப்பு
ஆமோஸ்
அதி: 04 – 05

**"அவர்கள் அவரைப் பரியாசம் பண்ணி, அவரை வாரினால் அடித்து, அவர் மேல் துப்பி, அவரைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்."** (பரி.மாற்கு 10:34)

பிரியமான தேவ பிள்ளைகளே! நேற்றும், இன்றும், என்றும் மாறாத வல்லமையான **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் இன்றைய நாளில் மகிழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** மனிதர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் அன்பு செய்கின்றோம். **அன்பின் வடிவான இயேசுகிறிஸ்துவே எங்கள் இருதயங்களில் அன்பை வைத்தார். 1யோவான் 4:7**இல் **"பிரியமானவர்களே ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம் ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்"** என எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! அந்த தேவ வசனத்திற்கூடாக தேவ பிள்ளைகளுக்குள் உண்மையான அன்பு இருக்க வேண்டுமென்று அல்லவா கூறுப்படுகின்றது. உலக மனிதர்கள் எவ்வண்ணமாயினும் தேவனைக் குறித்தறிந்துக் கொண்டுள்ள **தேவனுக்குள் பிறந்த அனைவரும் முழு உள்ளத்தோடும் உண்மையான அன்புடனும் வாழ வேண்டும். ஆனாலும் தேவ பிள்ளைகளுக்குள் கூட இவ்வண்ணமாக உண்மையான அன்பை காண முடியாதிருப்பது மிகவும் கவலைக்குரியதாகும்.** ஒருவருக்கொருவர்க்கிடையில் சகோதர அன்பு இன்றி வெறுப்புக் கொள்ளும் சுபாவத்தில் இருப்பதை அநேகமாகக் காணலாம். ஆனாலும் தேவ வசனம் கூறுகிறது **1யோவான் 4:20**இல் சொல்கிறது **"தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன் தான் கண்ட சகோதரினிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?"** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! பரலோக பிதா எங்களை எவ்வளவாக நேசிக்கின்றார் என்று இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களுக்கு வெளிப்படுத்துகிறார். தேவன் ஒரே பேறான குமாரனாக இவ்வுலகில் அவதரித்தது **எங்களை பாவத்திலிருந்து, சாபத்திலிருந்து மீட்டுக் கொள்வதற்காகவே இக்காரியத்தை நிறைவேற்ற தேவன் பெரும் வேதனைகளை அநுபவித்து பாவிகள் அறையப்படும் சிலுவையில் அறையப்பட்டு தன்னுயிரை மண்ணுலகிற்கு அர்ப்பணிக்கச் செய்தார்.** மேலே கூறப்பட்ட **பரி.மாற்கு 10:34**இல் இயேசுகிறிஸ்து தனது சீஷர்கள் பன்னிரெண்டு பேரையும் தன்னிடத்தில் அழைத்துக் கூறியது நமக்காக பெரும்பாடுகள் படுவதைக் குறித்தேயாகும். தேவன் அவ்வளவாக வேதனைகளை அநுபவித்தது எங்கள் பேரில் உள்ள அன்பினால் அல்லவா? **அந்த அன்பை எடுத்துக்காட்டாகக் கொண்டு நீங்கள் ஒருவரிலொருவர் உண்மையாக அன்புக் கொண்டு ஆசீர்வாதம் பெறுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! இயேசுகிறிஸ்துவுக்கூடாக உங்கள் அன்பைக் காட்டியதால் ஸ்தோத்திரம்! உங்கள் அன்பை எடுத்துக் காட்டாகக் கொண்டு அதன்படி ஜீவிக்க எனக்கு உதவி செய்யுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை." (பரி.யோவான் 15:13)

ஜீவ மன்னா
மார்ச்
12 சனி

தேவ வசனத்தை விசுவாசித்து முன் செல்லுகையில் எம்மை ஆசீர்வதிக்கும் தேவன்!

வேதவாசிப்பு
ஆமோஸ்
அதி: 06 – 07

**"நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி,"** (எரேமியா 1:8)

தேவனுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நீங்கள் இன்று ஆளுகின்ற அபிஷேகத்தினால் நிறைந்திருக்க வாழ்த்துகின்றேன். "உலக முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் உங்களோடு கூட இருக்கின்றேன் என பொருத்தனை பண்ணியுள்ள இயேசுகிறிஸ்து" (பரி.மத்தேயு 28:20)** இன்றும் எங்களோடு கூட இருக்கின்றபடியால் நாங்கள் மிக அதிர்ஷ்டக்காரர்கள்! ஏனெனில் தேவன் எம்மை பாதுகாத்து வாழ்வில் முன்னோக்கிக் கொண்டு செல்கிறார்.

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் உங்களில் சிலர் முகங் கொடுக்க வேண்டிய சில **பிரச்சினைகள், சவால்கள் நிமித்தம் வேதனையுடன் இருக்கின்றீர்களா?** உங்கள் சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் ஒரு **நோய் காரணமாக ஒரு மானசீக பிரச்சினை காரணமாக, அல்லது ஒரு சொந்த பிரச்சினையின் காரணமாக வேதனையுடன் இருக்கின்றீர்களா?** சில வேளைகளில் நீங்கள் பரிசுத்தமாக ஜீவிக்கின்றவரெனின் கணவன் அல்லது மனைவி அல்லது குடும்ப உறவினர்கள் காரணமாக மானசீகமாக உபத்திரவற்குள்ளாகிய ஒருவராகவிருக்கலாம். ஆனாலும் **கலங்காதிருங்கள்**! ஏனென்றால் இன்றும் எங்கள் தேவன் எமக்கு கூறுவது தேவன் எம்மை மீட்க எம்மோடு இருப்பதாகவே! அங்கே விஷேடமாகக் தேவன் கூறியிருப்பது **பயப்படாதீர்கள்** என்றே அதன் கருத்தாவது **நாங்கள் மனிதர்களுக்கு பயப்படுவது தேவையற்றது என்றாகும்.** ஏனெனில் **பரலோகத்தில் வாசம் பண்ணும் ஜீவிக்கின்ற தேவன் பிதாவானவரென்றும், திருக் குமாரனென்றும் பரிசுத்த ஆவியானவரென்றும் திரித்துவத்தின் தேவன் எங்களோடு கூட இருக்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! மனிதன் மாத்திரமல்ல எங்களுக்கு விரோதமாக **கிரியை செய்கின்ற துஷ்ட சேனைகள் இருப்பினும் அவைகளுக்கும் கூட பயப்படத் தேவையில்லை என்று எரேமியா தீர்க்கதரிசியிடம் நீ அவர்களுக்குப் பயப்பட வேண்டாம்.** உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கின்றேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். அவர் இன்றும் இந்த நிமிடத்திலும் எம்மோடு இருக்கின்றார். தேவன் மாறாதவராக இருக்கின்றார். **அவரை விசுவாசிக்கின்றவர்களை தேவன் ஒரு போதும் கைவிடாத தேவனானவர்.** இன்றும் மேற்கூறப்பட்டுள்ள வசனத்தை விசுவாசித்து நீங்கள் முன் செல்லுகையில் **நித்திய தேவன் இன்றும் உங்களோடிருந்து ஆசீர்வதிப்பாராக! வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் நல்ல மேய்ப்பனாகிய இயேசுகிறிஸ்துவே! நீங்கள் எனது பிதாவாக இருக்கின்றீர்கள். நீங்கள் என்னோடிருப்பதனால் நான் ஒன்றுக்கும் பயப்படமாட்டேன். நான் உங்களை விசுவாசித்து உங்களையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்னை மீட்டருளுங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்." (ஏசாயா 43:1)

ஜீவ மன்னா
மார்ச்
13 ஞாயிறு

## திருத்துவத்தின் தேவன் உங்களில் வாசம் பண்ணுகிறார்!

வேதவாசிப்பு
ஆமோஸ்
அதி: 08 – 09

**"அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று."**
(பரி.மத்தேயு 17:2)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நல்ல நாளாக அமைய வாழ்த்துகின்றேன்.** பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருமான திருத்துவ தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். நாங்கள் இதனால் பாக்கியவான்களாய் இருக்கின்றோம். **பரலோகப் பிதாவானவர் எம்மை அவரது சொந்த பிள்ளைகளாக உலகிலிருந்து தெரிந்தெடுத்து பிரித்தெடுத்தபடியால் சகல மனிதர்களைப் பார்க்கிலும் எம்மை ஆசீர்வாதமாக மாற்றிவைத்துள்ளார்.**

தேவ பிள்ளைகளே! **உலக மனிதர்கள் வித்தியாசமான பிரச்சினைகள், துன்பங்கள், நோய்கள் போன்ற அனேக காரியங்களை சந்திக்கிறார்கள்.** இப்படியான வேளைகளில் வாழ்வினை வெறுத்து, விரக்தியடைந்தவர்களாய், எதிர்பார்ப்புகள் அற்றவர்களாய் வாழ்கிறார்கள். **அவர்களது இருதயம் வேதனைகளைத் தாங்காது போகும் போது தற்கொலை செய்யவும் முயற்சிக்கிறார்கள்.** திடீர் விபத்துக்கள், அசம்பாவிதங்கள் மூலம் சரீர வேதனைகளை அனுபவிக்கிறவர்களளாய் தனிமைப்பட்டவர்களாகவும், கைவிடப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். ஆயினும் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உலகத்தோர் இவ்வண்ணமாக காணப்பட்டாலும் கிறிஸ்து இயேசுவை குறித்து அறிந்து அவரது பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு இப்படியாவைகள் எதுவும் நேரிடாது.

தேவ பிள்ளைகளே! **பரி.மத்தேயு 17:2இல் "அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று"** என்பதாக. இப்படி எழுதியிருப்பது **"எம் இரட்சகர் இயேசுவானவருடைய மகிமையின் ரூபத்தை அவரது சீஷர்களாகிய பேதுருவும், யாக்கோபும், யோவானும் கண்டவிதமாக அல்லவா? அது மாத்திரமல்ல மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்கு காணப்பட்டார்கள்"** என எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து பிலிப்பு எனப்பட்ட சீஷரிடம் என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான் எனக் கூறியுள்ளார். இன்றும் பரலோக **தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாக வாசம் பண்ணுகிறார். உங்களை ஆசீர்வதிக்கிறார். ஆசீர்வாதத்தின் நாள்!**



ஜெபம்

அன்பின் பிதாவே! நீங்கள் தாமே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராய் என்னில் வாசம் பண்ணுகிறபடியால் நன்றி! இன்றும் தேவரீர் தாமே என்னை நிரப்பும்படியாக இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

" நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்."
(பரி.யோவான் 14:11)

ஜீவ மன்னா
மார்ச்
**14** திங்கள்

## தம் கிரியைகள் யாவற்றிலும் கிருபையளிக்கும் தேவன்!

வேதவாசிப்பு
ஒபதியா 01
யோனா 01

**"கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்."** (சங்கீதம் 145:17)

எனக்கு பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தினால் இன்றைய நாளிலே தேவன் அளப்பரிய உன்னத கிருபை உங்களைக் குறைவில்லாமல் நிறைவாக்குவதாக என வாழ்த்துகின்றேன்.** மனிதர்களுடைய வாழ்விலே ஆத்மீக கிரியைகளும், மாம்சத்தின் கிரியைகளும் நடைபெறுகின்றன. ஆனால் உண்மையுள்ள ஆத்மீக பிள்ளைகளுக்கு மாம்சத்தின் கிரியைகள் அல்ல ஆத்மீகமான காரியங்கள் காணப்படுவது மிகக் கட்டாயமாகும். **கலாத்தியர் 6:15**இல் **"பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால் ஆவிக்கேற்றபடி நடந்துக் கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்"** என கூறப்பட்டிருக்கிறது.

தேவ பிள்ளைகளே! **ரோமர் 7:19,20**இல் இப்படியாக கூறப்பட்டுள்ளது **"ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால் நான் அல்ல எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது"** என்பதாக. இயேசுகிறிஸ்துவின் பிரதான சீஷனாகிய பவுல் அடிகளார் இவ்வாறாகக் கூறியிருக்கிறார். இவ் வார்த்தைகள் அவருக்கு மாத்திரமல்ல எங்களுக்குரியதாகும். ஆயினும் ஆண்டவர் பவுல் அடிகளார்க்கு கூறியுள்ளார் **"என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்"** என்பதாக. ஆண்டவர் அவருக்கு கிருபையளித்து பெலவீனங்களை மன்னித்து **அவரது பெலவீன நேரங்களில் தேவ ஆவியானவரால் அவரை நிரப்பி பெலப்படுத்தினார்.** அவரைப் போல இந்நாட்களில் எம்மை தமது கிருபையினால் நிரப்பி பெலவீனங்களில் பெலப்படுத்துகிறார். அவரது கிருபை எமக்குப் போதுமானதாயிருக்கிறது.

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட வேத வசனம் **சங்கீதம் 145:17**இல் **"கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும் தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்."** ஆத்மீகர்களுக்கு விரோதமாக சாத்தான் கொண்டு வரும் சோதனையான, சூழ்ச்சிகளுக்கு இலக்காகி தேவனுக்கு முன்பாக குற்றவாளிகளாக காணப்படும் போது **அவருடைய இராஜ்யத்திற்குரியவர்களாக தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களை சத்துருவானவன் அழிப்பதைத் தடுத்து, ஆக்கினைக்கு தப்பித்துக் கொள்ளும்படியாக அவர்கள் மனஸ்தாபமடைந்து ஜெபித்து மறுபடியும் பாவம் செய்யாதபடி தீர்மானம் செய்துக் கொண்டு தேவனுக்குள் காத்திருந்து மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! கிருபையின் நாள்!**

ஜெபம்

அன்பான இயேசுவே! நீங்கள் கிருபையுள்ளவராய் இருப்பதால் என் பிழைகள், பெலவீனங்களை மன்னித்து என் மீது தயவு கூர்ந்து என்னை மறுபடியும் உங்கள் ஆசீர்வாதங்களை பெறுக் கொள்ள தயை புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

**வேத வாக்குத்தத்தம்**

"ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்." (சங்கீதம் 103:6)

ஜீவ மன்னா
மார்ச்
15 செவ்வாய்

## தேவனின் வார்த்தைகள் இப்பூமியில் காரியங்களை தீவிரமாக நிறைவேற்றும்!

வேதவாசிப்பு
யோனா
அதி: 02 – 03

**"அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே; என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்."** (எரேமியா 1:12)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களது சகல காரியங்களும் சம்பூரணமாகும் நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** அவரது வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றும் தேவன் இன்றும் உங்களோடு இருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! மனிதர்கள் உங்களுக்கு பெரும்பாலான உறுதி மொழிகளைக் கொடுக்கலாம். ஆனாலும் எத்தனை பேருக்கு நான் கூறிய **உறுதி மொழிகளை நிறைவேற்ற முடிந்தது, நிறைவேற்ற முடியும் என எங்களுக்கு கூற முடியாது. ஏனெனில் அநேக சந்தர்ப்பங்களின் போது எங்களால் காணக்கிடைப்பது மனிதர்கள் தமது பொருத்தனைகளை நிறைவேற்ற முடியாமற் போகின்றமையே. இல்லாவிடின் கொடுத்த உறுதி மொழிகளை நிறைவேற்ற முடியாது, அவர்கள் வாழ்வில் நிலைக் குலைந்து போகின்றார்கள்.** நீங்கள் இதில் எந்த நிலையில் இருக்கின்றீர்கள் என்பதை நான் அறியேன். ஆனாலும் மனிதனது வாயின் வார்த்தைகள் அல்லது மனிதர்களின் உறுதி மொழிகள் மீது அல்ல **உங்களை சிருஷ்டித்த தேவன் வாயினின்று புறப்படும் வார்த்தைகளையும், பொருத்தனைகளையும் குறித்து தேவனையே நோக்கிப் பாருங்கள்.** மேலே கூறப்பட்ட தேவ வசனத்தில் தேவன் எரேமியா தீர்க்கதரிசிக்கு கூறுவதென்னவென்றால் என் வார்த்தைகளை தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றே.

தேவ பிள்ளைகளே! இங்கே எழுதப்படுகின்ற எல்லா வசனங்களும் தேவ ஆவியானவரின் ஏவுதலோடு எழுதப்படுகின்றன. ஆகையால் இங்கே கூறப்படுகின்ற வசனங்கள் இத்தினமஞ்சரியின் பிரதான ஆசிரியரான எனது வசனங்கள் இல்லையென்பதை உங்களுக்குக் கூற விரும்புகின்றேன். ஆகையால் இந்த ஜீவ மன்னா புத்தகத்தை வாசிக்கின்ற நீங்கள் அனைவரும் தேவனது தேவ வார்த்தைகளை முழு உள்ளத்தோடு விசுவாசித்து உங்கள் வாழ்வில் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். **ஏசாயா 55:11இல் "என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்"** என கூறப்பட்டுள்ளது. ஆகையால் **தேவன் கூறிய ஆலோசனைகள், உயர் திட்டங்கள் ஆகியவைகளை நிறைவேற்றும் தேவன் இன்றும் தீவிரமாக செயல்படுகிறார். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

என் பரலோகப் பிதாவே! உங்கள் வாயினின்று புறப்படும் ஒவ்வொரு வசனமும் நிறைவேறும்படியாக நீங்கள் அவற்றைக் குறித்து தீவிரமாக செயல்படுகின்றபடியால் ஸ்தோத்திரம்! உங்கள் வசனத்தின்படி இன்றும் என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் தீங்குசெய்யவும் அவர்கள்பேரில் எப்படி ஜாக்கிரதையாயிருந்தேனோ, அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."
(எரேமியா 31:28)

ஜீவ மன்னா
மார்ச்
**16** புதன்

# மிகுந்த கனிகளைக் கொடுத்து இயேசுவின் நாமத்தை மகிமைப்படுத்துங்கள்!

**வேதவாசிப்பு**
யோனா 04
மீகா 01

**"வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும் ஒன்று நூறுமாகப் பலன்கொடுக்கிறார்கள்; இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் என்றார்."** (பரி.மாற்கு 4:20)

அன்பான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டு அவரில் அன்பு கூருகிறவர்களாகிய உங்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்படியாக இன்றைய புதிய நாளில் வாழ்த்துகின்றேன்.** பரலோக பிதாவானவர் இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களை தன்னிடம் அழைத்துக் கொண்டது எங்கள் ஒவ்வொருவரும் வாழ்வில் கனி கொடுக்க வேண்டுமென்பதற்காகவே! ஆகையால் இயேசுகிறிஸ்துவை எங்கள் மீட்பராக எங்கள் வாழ்வில் ஏற்றுக் கொண்டமையால் **நாங்கள் மிக அதிர்ஷ்டசாலிகள் ஆவோம். நீங்கள் உள்ளங் கலங்காதீர்கள்!**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **பரி.மாற்கு 4:20**இல் எழுதியுள்ளது. **இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் பன்னிரெண்டு பேர்களோடு அவரை சூழ்ந்துக் கொண்டிருந்த மனிதர்களுக்கும் கூறிய வசனமாகும். தேவன் அங்கு கூறுவது தேவ வசனத்தைக் கேட்டு அவைகளை முழு உள்ளத்தோடு ஏற்று அதன்படி ஜீவிக்கின்றவர்கள் அநேக கனிகளைக் கொடுப்பார்கள்** என்றாகும். **தேவன் அங்கே நாம் தேவனின் வார்த்தைகளை எவ்வளவாக கௌரவப்படுத்துகின்றோம்?** அதைக் கேட்டு அதன்படி ஜீவிக்கின்றோமா? அவ்வளவாக நாம் கனி கொடுப்பவர்களாக இருப்போம். எனக் கூறுகின்றார். **"அது ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாக என அளவிடப்படுகின்றது."** நாம் ஒவ்வொருவரும் 100% பலன் கொடுக்க வேண்டுமென்பதே எனது சொந்த அபிப்பிராயமாகும். இயேசுவின் விருப்பமும் அதுவே என நான் அறிவேன். ஏனெனில் **"நீங்கள் என்னைத் தெரிந்துக் கொள்ளவவில்லை நான் உங்களைத் தெரிந்துக் கொண்டேன்." "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வதெதுவோ அதை அவர்கள் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்."** என **பரி.யோவன் 15:16**இல் எங்களுக்கு கூறியிருக்கின்றார்.

தேவ பிள்ளைகளே! உண்மையிலேயே இயேசுகிறிஸ்து தேவனுக்குள் நாம் கனி கொடுக்கும் வாழ்க்கை வாழ நம்மை அழைத்துக் கொண்டார் என அநேக தேவ வசனங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். **"நானே திராட்சை செடி நீங்கள் கொடிகள் நீங்கள் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்"** என விஷேடமாகக் கூறுகின்றார். **நீங்களும் இயேசுவுக்காய் கனி கொடுக்க தேவ வசனத்தில் தாகமாயிருங்கள். கிருபையின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! இயேசுவுக்கூடாக கனி கொடுக்கிற வாழ்க்கைக்கு என்னை அழைத்து கொண்டமையால் உங்களுக்கு ஸ்தோத்திரம்! உங்கள் தேவ வசனத்தில் நிலைத்திருந்து வாழ்வில் ஆசீரவாதம் பெற்றுக் கொள்ள எனக்கு உதவி செய்யுங்கள்.

இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்."
(பரி.யோவான் 15:8 )

ஜீவ மன்னா
மார்ச்
17 வியாழன்

# வாய் வார்த்தை எனும் பட்டயத்தினின்று எம்மை விலக்கி காக்கும் தேவன்!

வேதவாசிப்பு
மீகா
அதி: 02 – 03

**"ஆனாலும் எளியவனை அவர்கள் வாயிலிருக்கிற பட்டயத்துக்கும், பெலவானின் கைக்கும் விலக்கி இரட்சிக்கிறார்."** (யோபு 5:15)

இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்ட தேவ பிள்ளைகளே! **இயேசுவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு சுபநாளாக திகழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** உலகத்தார்கள் தங்கள் சுய விருப்பத்தின்படி தமது வாயை பாவித்து வார்த்தைகளை பேசலாம், ஆனால் **ஆத்மீகர்களாகிய நாம் எம் விருப்பத்தின்படி சுயாதீனமாக எம் வாயின் வார்த்தைகளை பாவிக்க முடியாது. "மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும். அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்."** என்று **நீதிமொழிகள் 18:21**இல் கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட எம் முதல் வேத வசனம் **யோபு 5:15**இல் **"எளியவனை அவர்கள் வாயிலிருக்கிற பட்டயத்துக்கும் பெலவானின் கைக்கும் விலக்கி இரட்சிக்கிறார்"** என்று எழுதப்பட்டிருக்கிறது. **இதன்படி வாயின் வார்த்தைகள் பட்டயத்திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. வார்த்தைகள் பட்டயத்தைப் போல் உயிரை அழிக்க வல்லதாயிருக்கிறது.** ஒரு பத்திரிகை செய்தியை உதாரணமாக உங்கள் முன் வைக்கிறேன் அன்போடும், அக்கறையுடனும் வளர்த்து வந்த தன் மகனிடம் ஒரு தாய் கேட்டாள் நீ யாரை மிகவும் நேசிக்கிறாய் அம்மாவையா? அல்லது அப்பாவையா? என்று அந்த மகன் கூறினார் நான் அப்பாவையே மிகவும் நேசிக்கிறேன் என்று **இதைக் கேட்ட தாய் மிகவும் மன வேதனையடைந்தார். வேதனைமிகுதியாகி தன் உயிரை மாய்த்துக் கொள்ளும்படியாக விஷத்தையும் அருந்தி விட்டதாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.** மகனின் வார்த்தைகளினால் தன் உயிரையே போக்கிக் கொள்ள முற்பட்ட இக்காரியம் எவ்வளவு வேதனைக்குரியதாக இருக்கிறது. **அந்த ஒரு வசனம் அந்த உள்ளத்தை எவ்வளவாய் காயப்படுத்தியிருக்கிறது என எண்ணிப் பாருங்கள்.**

தேவ பிள்ளைகளே! வாயின் வார்த்தைகள் இருதயத்தில் எவ்வளவு ஆழமாக பதிவாகின்றது என்பதை இச் செய்தியின் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது. **ஆனால் தேவனுடைய பிள்ளைகளான ஆத்மீக பிள்ளைகளின் இருதயங்கள் வார்த்தைகளின் நிமித்தம் வேதனையடையும் போது ஆண்டவர் உங்களை தேற்றி ஆறுதல் அளிப்பார்.** ஆதலால் **நீங்களும் உங்கள் வார்த்தைகளால் மற்றவர்களின் இருதயங்களை காயப்படுத்தாதிருங்கள்.** ஏனெனில் **நீதிமொழிகள் 10:20**இல் **"நீதிமானுடைய நாவு சுத்த வெள்ளி துன்மார்க்கனுடைய மனம் அற்ப விலையும் பெறாது"** என்று எழுதப்பட்டுள்ளது. மனிதர்களுடைய வாயின் வார்த்தைகள் எனும் பட்டயத்திலிருந்து உங்களைக் காக்கும் தேவனுக்கு பிரியமானவகையில் உங்கள் நாவை பயன்படுத்துங்கள். தேவனுக்கே மகிமை! **உங்களை இரட்சிக்கும் நாள்!**

ஜெபம்

அன்பான தேவனே! மனிதர்களின் வார்த்தைகளினால் என் இருதயம் வேதனையடையதபடி என்னை ஆறுதல்படுத்துகிறபடியால் நன்றி! என் நாவையும் காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்."
(நீதிமொழிகள் 16:24)

ஜீவ மன்னா
மார்ச்
**18** வெள்ளி

# மன்னிக்க மறுக்கும் உள்ளம் சாத்தானுக்கு ஆதாயமாகும்!

வேதவாசிப்பு
மீகா
அதி: 04 - 05

**"எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள்நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்."** (1 கொரிந்தியர் 2:10)

கிறிஸ்துவுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் பரிசுத்த இருதயம் உள்ளவர்களாயும், உறுதியான விசுவாசத்தோடும் இருக்கும்படி இக்காலை வேளையில் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.** சாத்தானுடைய அந்தகாரமான வலையிலிருந்து எம்மை மீட்கவும் என் வெற்றியின் பாதையில் வழி நடத்தவும் தேவன் எம்மை தம்மிடமாய் அழைத்துக் கொண்டார். தேவ வார்த்தை கூறுகிறது **"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வெற்றிச் சிறக்கப் பண்ணி ...தேவனுக்கு ஸ்தோத்திரம்!" 2கொரிந்தியர் 2:14.**

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட தேவ வார்த்தை கூறுகிறது "எவனுக்கு **நீங்கள் மன்னிக்கிறீர்களோ அவனுக்கு நானும் மன்னிக்கிறேன். மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ அதை உங்கள் நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்தில் மன்னித்திருக்கிறேன்." சாத்தானாலே நாம் மோசம் போகாதபடி அப்படிச் செய்தேன் என்பதாக.** இதிலிருந்து நாம் தெரிந்துக் கொள்வது **இருதயம் எப்போதும் பரிசுத்தமாய் இருக்க வேண்டுமென்பதே.** மாம்சத்தின் கிரியைகளாகும். ஆகையால் தேவ பிள்ளைகளாகிய **நாம் எம் இருதயத்தில் பொறாமை, குரோதம், வைராக்கியம்** போன்றவைகள் காணப்படுமாயின் அது மாம்சத்தின் கிரியைகளை எமக்குள் நடத்தும். அப்படியாயின் **தேவ ஆவியானவர் அல்ல சாத்தான் எமக்குள் கிரியை செய்கிறான் என்பது வெளிப்படுகிறது.** தேவ ஆவியானவர் எம் இருதயத்தில் வாசம் பண்ணுவாராகில் எம் இருதயத்திலே வைராக்கியம், பொறாமை, குரோதங்கள் ஏற்படாது. இவைகள் காணப்படின் **பரிசுத்த ஆவியானவர் எம்மில் வாசம் பண்ணமாட்டார்.**

தேவ பிள்ளைகளே! நித்திய ஜீவனுக்குரியவர்களாக தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களாகிய நாம் ஜீவக்கிரீடத்தை பெற்றுக் கொள்ளும்படியாக எந்நேரமும் பிரயாசப்பட வேண்டும். **எமது ஜீவக்கிரீடத்தை அபகரித்துக் கொள்ளும்படியாக முயற்சிகளை மேற் கொள்ளும் சாத்தானுடைய உபாயங்கள், தந்திரங்கள், சோதனைகளிலிருந்து எம்மைக் காத்துக் கொள்ள வேண்டும்.** எம் இருதயத்தை அசுத்தப்படுத்தி தேவனை எமக்கு தூரமாக்க முயற்சிக்கும் **சாத்தானுடைய அக்கினி அஸ்திரங்களிலிருந்து எம் இருதயத்தை காத்துக் கொள்வது அவசியமாகும். ஆகையால் நீங்கள் கவனமாயிருங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! சாத்தான் என்னை மோசம் போக்காதபடி என் இருதயத்தை பரிசுத்தமாக வைத்துக் கொள்ள எனக்கு தயை கூர்ந்தருளுமாறு ஜெபிக்கிறேன். இன்றைய வசனத்தின் பிரகாரம் மற்றவர்களை மன்னிக்கும் இருதயத்தை எனக்கருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல." (1 யோவான் 3:10)

ஜீவ மன்னா
மார்ச்
19 சனி

## சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்ட வசனத்துக்கு நடுங்கிறவனையே நோக்கிப் பார்க்கும் தேவன்!

வேதவாசிப்பு
மீகா
அதி: 06 – 07

"...ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்." (ஏசாயா 66:2 )

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு நன்மைகள் நிறைந்த ஆசீர்வாதமான நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன். நொறுங்கிய உள்ளத்தோடு வாழ்க்கைப் பாதையில் மிகவும் கஷ்டத்தோடு முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்ற உங்களை நோக்கி கவலைப்படாதீர்கள் என தேவன் இன்று கூறுகின்றார். பரி.யோவான் 16:20**இல் "**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நீங்கள் அழுது புலம்புவீர்கள் உலகமோ சந்தோஷப்படும் நீங்கள் துக்கப்படுவீர்கள் ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்**" என நமது இயேசுகிறிஸ்து எங்களுக்கு கூறியுள்ளார்.

தேவ பிள்ளைகளே! இன்றும் பரலோக தேவ பிதா அவரண்டை அவரது ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவிற்கூடாக **உங்களை அழைத்துக் கொண்டாரராகையால் அவர் மூலமாக உங்களை ஆசீர்வதித்து உங்கள் துக்கங்களை நிர்மூலப்படுத்தி சந்தோஷத்தை உதயமாகச் செய்திடுவார்.** விஷேடமாக மேலே கூறப்பட்ட **ஏசாயா 66:2**இல் ஆனாலும் "**சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்கிறவனையே நோக்கிப் பார்ப்பேன்**" என எழுதப்பட்டுள்ளது. இந்த தேவ செய்தி கூறுகின்ற உங்கள் பிரச்சினைகள், துன்பங்கள், போராட்டங்கள், தடைகள், காரணமாக உள்ளம் உடைந்து மனம் நொந்து சுகம் பெற தீர்வைப் பெற உங்களை சிருஷ்டித்த தேவனை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களா? **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற பிதாவை நோக்கி எந்நேரமும் ஜெபிக்கின்றீர்களா? பரிசுத்தமாக வாழ்கின்ற உங்களை வீணாக மனிதர்கள் நிந்தை, அவமானம் என்பவற்றோடு அவலட்சண வார்த்தைகளால் உங்கள் உள்ளத்தை சிறுமைப்படுத்தி துன்பப்படுத்துகின்றார்களா?**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் **கலங்காதிருங்கள்! உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சிறுமைப்பட்ட நொந்துப் போன உள்ளங்களை நோக்கிப் பார்க்கின்ற தேவனாக இருக்கின்றார். சங்கீதம் 34:18**இல் "**நீதிமான்கள் கூப்பிடும் போது கர்த்தர் கேட்டு அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுகிறார்.**" என எழுதப்பட்டுள்ளது. இப்பூமியில் வாழ்கின்ற எண்ணற்ற ஜனங்களின் மத்தியில் உடைந்த உள்ளத்தோடும் ஆவியில் நொறுங்குண்டும் தேவனை நோக்கி பார்க்கின்ற உங்களை தேவன் பார்க்கின்றார். **தேவனின் கருணை நிறைந்த கண்களுக்குப் புலப்படும் நீங்கள் மிக அதிர்ஷ்டசாலியாவீர்கள். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எனது நொறுங்கிய உள்ளத்தை காண்பதால் ஸ்தோத்திரம்! மனிதர்கள் என்னை சிறுமைப்படுத்தி அவமதிக்கின்ற போதும் நீங்கள் என்னை அரவணைத்து வழி நடத்தி காத்தருள வேண்டுமென இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்." (ஏசாயா 42:3)

ஜீவ மன்னா
மார்ச்
**20** ஞாயிறு

## உங்களைத் தேடி வரும் இயேசுகிறிஸ்து!

வேதவாசிப்பு
நாகூம்
அதி: 01 - 02

**"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்."** (வெளிப்படுத்தல் 3:20)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்கள் இருதயத்தில் புது சிந்தனையைத் தந்து புதிய ஆவியை ஊற்றி புதிய சந்தோஷத்தால் நிரப்பும்படியாக வாழ்த்துகின்றேன்.** இப்புவியில் வாழ்கின்ற எம்மை பரலோக ராஜ்யத்திற்கு உரிமை பெற்றவர்களாக தேர்ந்தெடுத்து பரலோக வாசியாக எங்களை மாற்றிய தேவனுக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக வாழ வேண்டும். **பரலோகப் பிதாவானவர் தேவ குமாரனாக எங்களைத் தேடி இப்பூமிக்கு வருகை தந்தமை எவ்வளவு உன்னத காரியம் என அறிவீர்களா?**

தேவ பிள்ளைகளே! **பரி.யோவான் 5ம் அதிகாரத்தில் "எருசலேம் வாசலினருகே காணப்பட்ட பெதஸ்தா எனும் குளத்தினருகே படுத்திருந்த 38 வருடங்கள் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷனை வெகுகாலமாக வியாதியஸ்தனாக இருப்பதை அறிந்து குணமாக்கும்படியாக தேடி வந்த நிகழ்வைக் காண்கிறோம்."** நீங்கள் இன்றும் பிரச்சினையின் காரணமாக, நோய்க் காரணமாக விடுதலை பெற முடியாத நிலையில் சிக்கித் தவிக்கின்றீர்களா? சில வேளைகளில் வாழ்விற்கும், **மரணத்திற்குமிடையில் போராடிக் கொண்டிருக்கலாம். ஆனாலும் கலங்காதிருங்கள்!** அன்று பெதஸ்தா குளத்தினருகில் பல வியாதியஸ்தர்கள் சூம்பின உறுப்புகளோடு சப்பாணிகளாக, குருடர்களாக படுத்துக் கொண்டிருந்தார்கள். **38 வருடங்கள் படுக்கையிலிருந்த மனிதனை அறிந்த இயேசுகிறிஸ்து தேடிப் போனார். அவனை சுகமாக்கினார்.**

தேவ பிள்ளைகளே! தேவன் இன்றும் உங்களைத் தேடி உங்களருகில் வந்திருக்கின்றார். அன்று தேவன் மாம்சத்தில் இருந்தார். ஆனாலும் **இன்று கண்களுக்கு புலப்படாத வண்ணம் தேவ ஆவியானவராக எம்மத்தியில் கிரியை செய்பவராக இருக்கின்றார்.** உங்கள் நண்பர், உறவினர், அயலவர்கள் அல்லது நீங்கள் அறியாத இதுவரை நீங்கள் காணாத ஒருவர் உங்களிடம் வந்து இயேசுகிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கலாம். அவர்களின் மூலமாக இப்படியாக இயேசுகிறிஸ்து பேசுகின்றார். **நீங்கள் அதை செவிமடுத்து இயேசுகிறிஸ்துவின் பேரில் முழு நம்பிக்கையை வைத்து விடுங்கள். உங்கள் இல்லத்தில், வேலைத்தளத்தில், வியாபாரஸ்தலத்தில் நீங்கள் பயணித்த பஸ் வண்டியில் உங்களைத் தேடி வந்த இயேசுகிறிஸ்து உங்கள் வாழ்வில் சுகம், சமாதானம், மகிழ்ச்சி, விடுதலை பெற்றுத் தருவார். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் பரம பிதாவே உங்கள் மகனாக உலகிற்கு வந்த நீங்கள் எம்மைத் தேடி எங்கள் வாழ்வில் சந்தோஷம், ஆறுதல், சமாதானம், விடுதலை, தந்தீர்கள். நான் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு நன்றி கூற உமக்குள் வாழ கிருபை செய்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (பரி.யோவான் 3:16)

ஜீவ மன்னா
மார்ச்
**21** திங்கள்

# கர்த்தருக்கு முன்பாக முறுமுறுக்காதிருங்கள்!

**வேதவாசிப்பு**
நாகூம் 03
ஆபகூக் 01

"அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்." (1 கொரிந்தியர் 10:10)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தினால் இன்றைய நாள் நல்ல நாளாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன்.** இன்றைய நாளில் அனேக எதிர்பார்ப்புகளுடன் உள்ளத்தில் மகிழ்ச்சியோடு நாளினை ஆரம்பிக்கிறீர்களா? அதிலும் இவைகள் நிறைவேறுமா என்ற **ஓர் ஐயம் உங்கள் இருதயத்தில் தோன்றியபடியால் உங்கள் காரியங்களைக் குறித்து முறுமுறுத்துக் கொண்டிருக்கிறீர்களா?**

தேவ பிள்ளைகளே! **1தீமோத்தேயு 6:6**இல் கூறுகிறது "**போதுமென்கிற மனதுடன் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்**" என்பதாக. ஆகையால் தேவ பிள்ளைகளாகிய நீங்கள் தேவைகளைக் குறித்தும் எதிர்பார்ப்புகளையும் **தேவ பாதத்தில் ஜெபத்தோடு ஒப்புவித்து அக்காரியங்களைக் குறித்த மனப்பாரத்தை அகற்றி விடுங்கள்.** அவர் உங்கள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டார் என விசுவாசிப்பீர்களாயின் உங்கள் இருதயம் இலகுவாகிவிடும். அப்போது அவைகளை குறித்த முறுமுறுப்பு அவைகளைக் குறித்த சிந்தனைகள் எல்லாம் மறைந்து விடும். **இன்னமாய் உங்கள் ஆசீர்வாதங்கள் தாமதமாகும் எனின் அதைக் குறித்தும் கவலைப்படவோ, முறுமுறுக்கவோ அவசியமில்லை. விசுவாசமுள்ளவராய் அவரையே நோக்கியிருங்கள்.**

தேவ பிள்ளைகளே! **1கொரிந்தியர் 10:10**இல் "**அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அது போல் நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்**" என்று எழுதப்பட்டிருக்கிறது. கானான் தேசத்தை சுற்றிப்பார்ப்பதற்கு மோசே பன்னிரெண்டு கோத்திரங்களிலிருந்து பன்னிரெண்டு பேரை தெரிந்து அனுப்பினான் இதில் **யோசுவாவும், காலேப்பும் மாத்திரம் தேசத்தை நல்ல தேசம் எனக் கூறினார்கள். மற்ற பத்து பேரும் தேசத்தைக் குறித்து துர்ச்செய்தி பரப்பினார்கள்.** இதைக் கேட்ட ஜனங்கள் யாவரும் கூக்கிரலிட்டு இராமுழுவதும் அழுது புலம்பினார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். **யோசுவாவும், காலேப்பும் கூறும் வார்த்தைகளை அவர்கள் நம்ப மறுத்தார்கள். செவி கொடுக்கவில்லை. அப்போது கர்த்தருடைய மகிமை இறங்கியது. கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் நோக்கி எனக்கு விரோதமாக முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன். இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன் என்றார்.** இன்றும் தேவன் உங்களை காண்கிறவராய் இருக்கிறார். அவரிலே விசுவாசம் உள்ளவர்களாய் வாழுங்கள். ஜெயத்தைப் பெறுங்கள். **ஜெயத்தின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிறவர்களை விரும்பாதவர் என இன்று நான் அறிந்துக் கொண்டேன். நாங்களும் இது போல் முறுமுறுக்காதபடி உங்கள் மீது விசுவாசமுள்ளவராய் உங்களையே பார்த்திருக்க எனக்கு தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்." (சங்கீதம் 73:1)

ஜீவ மன்னா
மார்ச்
22 செவ்வாய்

# தேவனின் விருப்பம் என்ன?

வேதவாசிப்பு
ஆபகூக்
அதி: 02 - 03

**"அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்."** (பரி.லூக்கா 10:39)

தேவனுக்குள் பிரியமானவர்களே! எம்மை பிரமிக்கத்தக்க அதிசயமாய் உருவாக்கி எம்மோடு சதாகாலங்களிலும் **ஜீவிக்கிற தேவன் இயேவின் நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நன்மைகள் பல நிறைந்த நல்ல நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** நாள்தோறும் **"ஜீவ மன்னா" நாளிதழை வாசித்து ஆத்துமாவிலே பெலனடையும், நீங்கள் யாவரும் பாக்கியவான்களே!** உங்கள் ஆத்துமாவைக் குறித்து மிக அக்கறையுள்ளவராய் இவ் **"ஜீவ மன்னா"** நாளிதழை உங்களுக்கு அளிக்கும்படியாக அவர் எமக்கருளும் அநுக்கிரகம் மகா பெரியது.

தேவ பிள்ளைகளே! தேவனுடைய விருப்பம் என்ன? என்பதை **பரி.லூக்கா 10:39**இல் வெளிப்படுத்துகிறது. ஆத்மீகர்களாகிய நாம் தேவனுக்கு அன்பு செலுத்தி கிட்டிச் சேர்ந்து அவரையே சார்ந்திருக்கிறவர்களாவோம். **"தேவ இராஜ்யத்தின் வேலைகளுக்காக முழு சக்தியோடு ஓடியாடி சேவை செய்ய வேண்டும். எம் உள்ளத்திலே தேவ சித்தத்தை செய்கிறோம் என்ற மனநிறைவு காரணப்படலாம்."** தேவனுக்காக நன்மையானவற்றை செய்து மனமகிழ்வுடன் இருக்கக் கூடும். நாம் அவருக்காக அவருடைய இராஜ்யத்திற்காக நாம் செயல்படுகின்ற போது தேவன் எம்மோடிருக்கிறார். என்பதை விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம். இவ்வளவும் நாம் செய்தாலும் தேவன் இவற்றிலெல்லாம் விருப்பமுடையவராக இருக்கமாட்டார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து பெத்தானியா என்ற கிராமத்திற்கு போனார் அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு மரியாள் எனப்பட்ட ஒரு சதோதரி இருந்தாள். **அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.** மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து ஆண்டவரே நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். **இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்குகிறாய், தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துக் கொண்டாள் என்றார். நீங்களும் தேவனுடைய விருப்பத்தை அறிந்து செயல் புரியுங்கள். கிருபையின் நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! உங்கள் வார்த்தைகளை ஆவலுடன் கேட்பதும், உங்கள் வார்த்தைகளை நேசிப்பதையும் விரும்புகிற தேவனே! உங்கள் விருப்பம் என்னில் நிறைவேற தயை கூர்ந்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." (பரி.யோவான் 14:23)

ஜீவ மன்னா
மார்ச்
**23** புதன்

# சுகம் பெற நீங்களும் ஆயத்தமா?

வேதவாசிப்பு
செப்பனியா
அதி: 01 – 02

**"அப்பொழுது, குருடரும் சப்பாணிகளும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள், அவர்களைச் சொஸ்தமாக்கினார்."** (பரி.மத்தேயு 21:14)

பிரியமுள்ள தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் தேவனின் கரக் கிரியைகளாகிய நீங்கள் நன்மையினாலும், கிருபையினாலும் முடிசூடி ராஜரீக அபிஷேகத்தில் இன்று நிறைந்திருக்குமாறு வாழ்த்துகின்றேன்.** இன்றும் இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்று அவரிடம் உங்கள் வாழ்வை ஒப்புவித்து வாழ்வீர்களெனின் உங்களைப் போன்று ஒரு அதிர்ஷ்டக்காரர் இப்பூமியிலே இல்லையென நான் விசுவாசத்துடன் உங்களிடம் கூறுகின்றேன். ஏனெனில் **துர்திஷ்டசாலியாக இப்பூமியில் வாழ்ந்துக் கொண்டிருந்த என்னை அதிர்ஷ்டசாலியாக உயர்த்தியது தேவனேயாவார்.**

தேவ பிள்ளைகளே! நான் அப்படியாகக் கூறியது எனது வாழ்வில் நான் பெற்ற அனுபவத்தினாலேயே ஆகும். **நான் 27வது வயதில் நோயுற்று துர்திஷ்டசாலியாக வாழ்ந்தேன். ஏனெனில் எனது தந்தை கேஸ்ரிக் நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததோடு நானும் 16 வயதை அடைந்த வேளையிலேயே கேஸ்ரிக் நோயாளியானேன். அதன் பிறகு 11 வருடம் அந்நோயினால் வேதனைப்பட்டேன்.** இதன் காரணமாக அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டது. அதன் பிறகும் நோய் கூடியதேயொழிய குறைவில்லை எனது இந்த நிலையைக் கண்டு என் நண்பரொருவர் சுகம் பெறும்படியாக தேவ சபைக்குக் கூட்டிச் சென்றார். எனக்குள் இருந்த **மரண பயத்தின் காரணமாகவே அந்த தேவ சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துக் கொண்டேன்.** உள்ளத்தில் விசுவாசமற்று இருந்த எனக்குள் அன்றே தேவன் தனது உயர்ந்த அன்பை ஊற்றினார். இயேசுகிறிஸ்துவின் அளவிட முடியாத அன்பையும், அவர் மனிதர்களுக்கு காட்டுகின்ற அன்பு எப்படிப்பட்டதென்றும் புரிந்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

தேவ பிள்ளைகளே! அன்று சுகமளிக்கும் ஆராதனை முடிவடையும் தருணத்தில் தேவனின் **அபிஷேகம்** எனக்குள் கிடைக்கப் பெற்று **நோயாளியாக இருந்த என்னில் ஒரு மாற்றமும், உள்ளத்தில் ஒரு புதிய எதிர்ப்பார்ப்பும் உருவானது.** அன்று முதல் சுகமானேன். இப்படியாக **11 வருடம் உபத்திரவப்பட்ட நான் முழுமையாக குணமடைந்தேன். இன்றும் பரி.மத்தேயு 21:14**இல் தேவன் கூறுவது இதையல்லவா? **நீங்கள் நோயில் உபத்திரவப்படுவீர்களெனின் இன்றே இயேசுவண்டை வாருங்கள். தேவன் உங்களை நிச்சயமாக குணப்படுத்துவார். சந்தோஷத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் அழைத்தவர்களை ஒரு போதும் புறம்பே தள்ளுவதில்லை என்பதை நான் அறிவேன். இயேசுகிறிஸ்துவுக்கூடாக என்னை சுகப்படுத்துங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." (பரி.யோவான் 6:37)

ஜீவ மன்னா
மார்ச்
**24** வியாழன்

## எமக்கு சகலவற்றையும் அருளும் பரலோக பிதா!

வேதவாசிப்பு
செப்பனியா 03
ஆகாய் 01

**"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?"** (ரோமர் 8:32)

பிரியமுள்ள என் தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இத்தினம் சகல சௌபாக்கியங்களோடு கூடிய நல்ல நாளாக அமையுமாறு பிரார்த்திக்கின்றேன். பரலோகத்திலிருக்கிறவரும் எம்மை உண்டாக்கினவருடைய ஆசீர்வாதங்களை பெறுகிற நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்!** ஏனெனில் **"கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும் அவர் தமக்குச் சுதந்திரமாகத் தெரிந்துக் கொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது."** என **சங்கீதம் 33:12**இல் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் உங்கள் வாழ்விலே நிறைவேறாத அனேக விடயங்கள் **இன்று நிறைவேறும் என்று உங்கள் உள்ளத்திலே விசுவாசியுங்கள்.**

தேவ பிள்ளைகளே! ஆகையால் மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள் என **எபிரேயர் 10:35**இல் எழுதப்பட்டுள்ள பிரகாரம் **நீங்கள் முழு உள்ளத்தோடு விசுவாசிப்பீர்களேயானால் இன்றும் உங்கள் காரியங்கள் நிறைவேறுவது நிச்சயம். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! இன்னமாய் நீங்கள் கேட்பது எல்லாமே கிடைக்கும் என நினைக்கிறீர்களா?** ஏனெனில் நாம் நினைப்பதற்கும், கேட்பதற்கும் அதிகமாக எம்மை ஆசீர்வதிக்கவும், எமக்கு நன்மையானவைகளை, ஏற்றவைகளை ஏற்ற வேளையில் கொடுக்கவும் பரலோக பிதா அறிந்திருக்கிறார். **நாம் எம்மைக் குறித்து வைத்திருக்கும் சிந்தனைகளைப் பார்க்கிலும் பெரிய திட்டங்களை, சிந்தனைகளையும் அவர் எம்மைக் குறித்து வைத்திருப்பதால் நாம் கேட்பது கிடைக்காமற் போகலாம். அதைக் குறித்து நீங்கள் கவலை கொள்ளாது அவரது சித்தத்தின்படி நீங்கள் ஆசீர்வதிக்கும்படி உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்புக் கொடுங்கள்.**

தேவ பிள்ளைகளே! தேவன் எமக்கு எல்லாமே எம் நன்மைகளின் நிமித்தம் செய்கிறவராவார். மேலே தரப்பட்ட வேதவாக்கியம் **ரோமர் 8:32** கூறுகிறது **"தம் சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர். அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி"** என்று அதன்படி பதினைந்து வருடக்காலமான என் சுய ஊழியத்தை தாங்கி ஆசீர்வதித்து வருகிறார். உங்களுக்கும் அவ்வாறே செய்வார். **ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! நான் உங்கள் பிள்ளையாக இருப்பது மகா பெரிய பாக்கியமே! எம் வாழ்வில் ஆத்மீக, லௌகீக ஆசீர்வாதங்கள் யாவற்றையும் எமக்கருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.
~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை."
(யாக்கோபு 1:17)

ஜீவ மன்னா
மார்ச்
25 வெள்ளி

பெரிய வெள்ளி

## உங்களுக்காக பலியான உங்கள் அன்பான இயேசுகிறிஸ்து!

வேதவாசிப்பு
ஆகாய் 02
சகரியா 01

**"மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்."** (பரி.மத்தேயு 27:42)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றயை நாளும் சுப நாளாகும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்து இன்றைய நாளைப் போன்ற ஒரு நாளில் **உலகில் அனைத்து மனிதர்களது பாவங்கள், சாபங்கள் காரணமாக சிலுவையில் தன்னுயிரைத் தியாகம் செய்தார்.** இவ்வாறாக மரித்தது சகல மனிதர்களின் பாவங்களினின்றும், சாபங்களினின்றும் மீட்பைப் பெற வேண்டுமென்பதற்காகவே. "**உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்**" என்று **பரி.யோவான் 3:17**இல் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! **பாவத்தின் சம்பளம் மரணம் என்றும் எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி என்றும் (ரோமர் 6:23, 3:23)** எழுதப்பட்டுள்ளது. மனிதனானவன் தனது பரம்பரை பரம்பரையாக தொடர்ந்துக் கொண்டிருக்கின்ற பாவங்கள், சாபங்கள் காரணமாக மனிதர்கள் வேதனையடைந்து மரணத்திற்குள்ளாவதை தேவ வசனங்கள் எமக்கு வெளிப்படுத்துகின்றன. **அதை உறுதிப்படுத்தும் வண்ணம் மனிதன் நோயின் காரணமாக, வாழ்வில் பிரச்சினை காரணமாக உபத்திரவங்கள் காரணமாக, வேதனையுடன் வாழ்வில் இறுதிவரை வாழ்வதை நாம் அநேகமாகக் காண்கிறோம்.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருக்கட்டும்! உலகில் அனைத்து மனிதர்களின் வாழ்க்கையை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் மீட்கும்படியாக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணித்து அவரது சரீரத்தின் பரிசுத்த தூய இரத்தத்தினால் எல்லா பாவங்களிலிருந்தும் கழுவி பரிசுத்தப்படுத்தினார்.** மனிதன் அனுபவிக்க வேண்டிய மரணத்தின் கொடூர சுபாவம் எத்தகையதென்பதை தேவன் சாபத்திற்குள்ளனவராக **மனிதனின் பாவத்தின் நிமித்தம் பெறுகின்ற கசையடிகள் 39யும் பெற்று முழு வேதனையையும் அனுபவித்து கொடூர சிலுவையில் மரணித்தார்.** இன்றும் இயேசுகிறிஸ்துவிடம் வருகின்ற அவரை விசுவாசிக்கின்ற ஒவ்வொருவரையும் **தேவன் தனது சரீரத்தினின்று சிந்திய தூய இரத்தத்தினால் கழுவி பரிசுத்தப்படுத்தி பாவங்களிலிருந்தும், மரணமெனும் கொடூரத் தண்டனையிலிருந்தும் மீட்டுக் கொள்கிறார்.** இன்றும் இயேசுகிறிஸ்துவின் தியாகத்தினால் விடுதலை பெறுகின்றீர்கள். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் அன்பை அளவிட முடியாது. உங்கள் அன்பை எங்களுக்கு காட்டுவதற்கு உங்களின் மகனான இயேசுகிறிஸ்துவை எங்களுக்காக பலியாக ஒப்புக் கொடுத்தீர். இயேசுகிறிஸ்துவுக்கூடாக எமக்கு விடுதலை கொடுத்தமையால் ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில்.

வேத வாக்குத்தத்தம்

"ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார்...."
(பரி.யோவான் 12:36)

ஜீவ மன்னா
மார்ச்
26 சனி

# உங்கள் வழியின், நடைகளை ஆராய்ந்து பார்க்கும் தேவன்!

வேதவாசிப்பு
சகரியா
அதி: 02 – 03

**"அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ?"** (யோபு 31:4)

அருமையான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றும் உங்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான நாளாகட்டும் என வாழ்த்துகிறேன்.** இன்றும் எங்கள் மத்தியில் வாசம் பண்ணும் எங்களுக்கு முன்னாலே பயணிக்கும், எங்கள் பாதைகளைச் செம்மைப்படுத்தும், எங்களைக் குறித்து அதிகமாக **கரிசனைக் கொண்டு பராமரிக்கும் தேவனாலே தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்களும் நானும் மிக அதிர்ஷ்டசாலிகள்!**

தேவ பிள்ளைகளே! **யோபு 31:4**இல் எழுதப்பட்டுள்ளதாவது, **"எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்கள் எல்லா நடைகளையும் எண்ணுகிறார் என்பதையே ஏனென்றால் யோபு கூறுகிறார் அவர் என் வழிகளைப் பார்த்து என் நடைகளை எண்ணுகிறார் அல்லவே"** என்றாகும். அதைக் குறித்து சிறிது சிந்தித்து பார்ப்போமாகில் நாங்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு எவ்வளவு தூரம் நடக்கின்றோம். எத்தனை தடவைகள் நடக்கின்றோம் என்பதை நாங்கள் அறியமாட்டோம் சில வேளைகளில் எங்கள் வேலைத்தளத்தில் அல்லது எமது இல்லத்தில் நாங்கள் ஒரு நாளைக்கு நாங்கள் வைக்கும் நடை அடிகள், அத்தோடு அங்குமிங்குமாக பயணிக்கும் போது நடக்கும் நடைகள் என்பவைகளை எண்ணுவது சுலபமன்று. ஆனாலும் **பரலோகத்தில் வாசம் பண்ணும் எங்கள் தேவன் எங்கள் பாதங்களின் மூலமாக எமது நடை அடிகளை எண்ணுகின்றார் என்று யோபு கூறுகின்றார்.** அது மிகவும் அருமையானதும், கருத்து மிக்கதென்றும் என் உள்ளத்தில் தோன்றுகிறது. அதில் உண்மையாகவே தெளிவாகுவது என்னவென்றால் **தேவன் அவரின் பிள்ளைகளான ஒவ்வொருவரையுங் குறித்து எவ்வளவாக கரிசனைக் கொண்டுள்ளார் என்பதே.**

தேவ பிள்ளைகளே! **அன்பான தாய் தனது பிள்ளையானது சிறு காலத்திலே நடக்க முற்படும் போது மிகவும் ஆசையோடு அடிகளை முன்னேரக்கி வைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.** அப்படியாக நடக்கின்ற வேளை பிள்ளை விழப் போகும் பொழுது உடனே பிடித்துக் கொள்ளுவாள். அப்படியே எங்கள் தேவனும் எமது ஒவ்வொரு அடிகளையும் பார்த்துக் கொண்டே இருக்கிறார். **எங்கள் கால்கள் வழுவாது எங்களை பாதுகாத்துக் கொள்கிறார்.** நாங்கள் விழுந்து விடாமல் அவர் தமது கரங்களால் உடனே எம்மைத் தாங்கிக் கொள்ளுகின்றார். உங்கள் நடைகளை எண்ணுகிற, உறுதிப்படுத்துகிற **தேவன் உங்களோடு. ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! நீங்கள் பரலோகத்திலிருந்து என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் எனது நடைகளை எண்ணும் தேவனாவீர்கள். உங்கள் கண்கள் என்னை எந்நேரமும் நோக்கி என்னை பாதுகாப்பதால் ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்." (சங்கீதம் 121:3)

**ஜீவ மன்னா**

**மார்ச்**

**27** ஞாயிறு

உயிர்த்த ஞாயிறு

# தேவன் பேரில் விசுவாசங் கொண்ட நாம் வெட்கப்பட்டு போவதில்லை!

**வேதவாசிப்பு**

சகரியா

அதி: 04 – 05

**"என் ஆத்துமாவைக் காப்பாற்றி என்னை விடுவியும்; நான் வெட்கப்பட்டுப்போகாதபடி செய்யும்; உம்மை நம்பியிருக்கிறேன்."**

(பரி.யோவான் 5:6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றும் வெற்றியின் நாளாக அமைவதாக என வாழ்த்துகின்றேன்.** மரணத்தை ஜெயம் கொண்டு எழுந்த கிறிஸ்து இயேசு இன்றும் உங்கள் இரட்சகராய் இருப்பதால் அவரை ஏற்றுக் கொண்ட யாவரும் பாக்கியவான்கள்! ஏனெனில் **இயேசுகிறிஸ்து 2016ம் வருடங்களுக்கு முன்னர் இது போன்ற ஒரு நாளிலே சாவை வென்றவராய் மரணத்திலிருந்து மறுபடியும் உயிரோடெழுந்து, பரலோகத்திலே ஜீவனுள்ளவராய் வாசம் பண்ணுகிறார்.**

தேவ பிள்ளைகளே! **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** இச் செய்தியின் தலைப்பு வசனத்தில் **சங்கீதம் 5:20**இல் கூறப்படுகிறது "**தாவீது ராஜாவினால் அவரது தேவனாகிய ஆண்டவருக்கு ஏறெடுத்த ஜெபமாகும். அவர் தேவனை நோக்கி என் ஆத்துமாவைக் காப்பாற்றி என்னை விடுவியும் நான் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும் உம்மை நம்பியிருக்கிறேன்**" என்று. உலகத்தோரைப் போலவே ஆத்மீகர்களும் தம் வாழ்க்கையில் பிரச்சினைகள், சவால்கள், துன்பங்கள் போன்ற அனேக காரியங்களை சந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்வேளைகளில் மனிதர்கள் முன்பாய் **நான் வெட்கப்பட்டுப் போய் விடுவேனோ? என் உள்ளத்தில் பயம் ஏற்படக் கூடும்.** நீங்கள் பயப்படாதீர்கள். தாவீது ராஜாவுக்கு அவனது மகனாகிய அப்சலோமுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாய் அப்சலோம் தாவீது ராஜாவிற்கு விரோதமாக செயல்பட்டு **இஸ்ரவேல் ஜனங்களை தம் பக்கம் இழுத்துக் கொண்டதனால் பயமடைந்த தாவீது ராஜா தமது சிங்காசனத்தை விட்டு அப்சலோமிற்கு பயந்து ஓடிப் போனான்.**

தேவ பிள்ளைகளே! தாவீது ஆண்டவர் மீது மிகவும் விசுவாசமுள்ளவனாய், அவர் சொல்வது எல்லாவற்றையும் செய்தான். அவர் அவனோடிருந்து அவனை கைவிடாது அவனோடிருந்து அப்சலோமின் நண்பன் ஆகித்தோப்பேல் சொன்ன நல்ல யோசனையை **ஊசாய் என்பவன் மூலம் ஆலோசனை நல்லதல்ல என்று மாற்றிச் சொல்லி மூடனாக்கி தாவீது ராஜாவை வெட்கப்படுத்தாது மறுபடியும் அரியணையில் அமர்த்தினார்.** ஆகையால் இயேசுகிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்து ஆண்டவரை ஏற்றுக் கொண்ட உங்களை அவர் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போக விடமாட்டார். **உங்கள் ஆத்துமாவைக் காத்து ஜெயத்தை கட்டளையிடுவார். ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

என் பரம பிதாவே! இயேசுகிறிஸ்துவின் மூலம் எம்மை உம்மிடம் அழைத்துக் கொண்டவரே நன்றி! இதனால் இயேசுகிறிஸ்து எம்மை வெட்கப்படவிடாது காத்து கொள்கிறபடியால் நன்றி! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை." (பரி.யோவான் 6:37)

ஜீவ மன்னா
மார்ச்
28 திங்கள்

## தேவனுக்கும் நமக்குமிடையே மத்தியஸ்தராய் விளங்கும் இயேசுகிறிஸ்து!

வேதவாசிப்பு
சகரியா
அதி: 06 – 07

**"தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே."** (1 தீமோத்தேயு 2:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் வல்லமை பொருந்திய நாமத்தினால் இத்தினமும் சுகம் பெலம் நிரம்பிய நல்ல நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** கிறிஸ்துவால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களும் ஜீவ கிரீடத்தை அணிந்துக் கொள்ளும் வரப்பிரசாதத்தை உரிமையாக்கிக் கொண்ட **நீங்களனைவரும் அதிர்ஷ்டசாலிகளாவீர்கள்!** ஏனெனில் இயேசு **பரி.யோவான் 15:16இல்** கூறுகிறார் "**நீங்கள் என்னைத் தெரிந்துக் கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துக் கொண்டேன்**"... என்பதாக.

தேவ பிள்ளைகளே! **தேவன் தமது சுயாதீனத்தின்படி எம்மை தெரிந்துக் கொண்டபடியால் எமது வாழ்க்கையின் எல்லா வேளைகளிலும் எங்களுக்கு நன்மைகளையே செய்யும்படியாக மிக அக்கறையாக கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்.** ஆகையால் உலகத்தோரைப் போல் உங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தை குறித்து கவலைப்பட்டுக் கலங்காதீர்கள்! உலகத்தோர் வாழ்விலே வெற்றிப் பெறுவது எங்ஙனம் என யோசித்தே காலத்தை கடத்துகிறார்கள். ஆயினும் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** ஏனெனில் தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட ஒவ்வொருவரின் வாழ்க்கையை குறித்த எல்லா பொறுப்புக்களையும் அவர் ஏற்றுள்ளார். ஆகையால் **நாம் எதைக் குறித்தும் கவலைப்பட தேவையில்லை.** எம் பிரதான தேவ வார்த்தை கூறுகிறது "**தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே என்றும் எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே**"... **1 தீமோத்தேயு 2:5.6.**

தேவனுடைய பிள்ளைகளே! **1யோவான் 1:7இல்** "...**இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.**" எனவே இவ்வளவு பரிசுத்தமானவர் முன் நாம் எவ்வளவு உத்தமமாய் இருக்க வேண்டும். என்பதை அறிந்துக் கொள்வோம். **ஆயினும் எமக்காய் பரிசுத்த இரத்தத்தை சிந்திய சிலுவையில் தம்மை பலியாக ஒப்புக் கொடுத்த இயேசுகிறிஸ்து இன்றும் எமக்காய் பரலோக பிதாவின் முன்பாய் மத்தியஸ்தராய் இருக்கிறார்.** எம் பலவீனங்களில் நாம் குற்றவாளிகளாய் தீர்மானிக்கப்படாதபடி எம்மை காத்துக் கொள்கிறார். **குற்றமற்ற தேவ பிள்ளைகளாக வாழும்படி எமக்கு வழி காட்டுகிறார். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் அன்பின் இயேசுவே! உங்கள் திருக்குமாரன் இயேசுகிறிஸ்து எனக்காக மத்தியஸ்தராய் இருப்பதால் நன்றி! இன்றும் உம்முடைய கிருபையை அவர் மூலமாக எமக்கருளி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."
(1 யோவான் 1:9)

ஜீவ மன்னா
மார்ச்
29 செவ்வாய்

# நங்கூரமாக செயல் புரியும் தேவ ஆவியானவர்!

வேதவாசிப்பு
சகரியா
அதி: 08 – 09

**"அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள்; தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டுவந்து சேர்க்கிறார்."** (சங்கீதம் 107:30)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாள் வெற்றிகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** இன்றும் தேவ செய்திக்கூடாக ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஏதாவதொன்றை உங்களுக்கு வெளிப்படுத்துவார் என விசுவாசிக்கின்றேன். **எங்கள் வாழ்க்கையை ஒரு படகுக்கு ஒப்பிட முடியும். உலகமெனும் சமுத்திரத்திற்கு ஒப்பிடலாம். ஆவிக்குரிய தேவ பிள்ளைகளான நாமும் உலகில் வாழ்கின்றோம்.** சமுத்திரத்தில் பயணிக்கிற கப்பல் அதற்கென குறிக்கப்பட்ட பயணப் பாதையில் பயணித்து சரியான ஸ்தலத்திற்கு வந்தடைகிறது. அதே போல் ஆவிக்குரிய வாழ்வில் **நாமும் நியமித்திருக்கும் ஜீவ பாதையில் பயணித்து நியமித்த ஸ்தானத்தை அடைய வேண்டும்.**

தேவ பிள்ளைகளே! மேலே குறிக்கப்பட்ட **சங்கீதம் 107:30**இல் எழுதப்பட்டிருப்பது **"அமைதலுண்டானதினிமித்தம் அவர்கள் சந்தோஷப்படுகி~றார்கள் தாங்கள் நாடின துறைமுகத்தில் அவர்களைக் கொண்டு வந்து சேர்க்கிறார்"** என்றாகும். எந்தவொரு கப்பலும் துறைமுகத்தை அடைந்தவுடன் அதனை நிறுத்தி வைக்க நங்கூரம் இணைக்கப்படல் வேண்டும். **பெரிய சிறிய எந்தவொரு கப்பலுக்கும் அது அவசியமாகும். அது மாத்திரமின்றி கப்பலானது சமுத்திரத்தில் பயணிக்கும் வேளை சூறாவளி, சுழல் காற்று, கொந்தளிப்பு என்பனவற்றில் அகப்படும் வேளை இந்த நங்கூரமானது கடலின் நடுவில் கப்பலை பாதுகாப்பின் பொருட்டு நிறுத்தி வைக்க பெரும் துணை புரிகின்றது.** எந்தவொரு ஆபத்தின் போது உபயோகிக்கப்படுகின்றது. ஆத்மீக தேவ பிள்ளைகளாகிய எமக்கு தேவனின் தேவ ஆவியானவரது கிரியைகள் எங்கள் வாழ்விற்கு நங்கூரமாகும். ஏனென்றால் எங்கள் உள்ளத்தை எல்லா வேளையிலும் பாதுகாப்பது மிகவும் கஷ்டமான காரியம் ஆனாலும் கப்பலை நிறுத்த நங்கூரம் போடப்படுவது போல **பரிசுத்த ஆவியானவர் எங்களுக்குள் இருப்பாராகில் எங்கள் உள்ளம் நினைவலைகள் என்பவைகளை அங்குமிங்குமாக ஓட இடமளிக்காது அதை நிறுத்தி வைப்பார்.**

தேவ பிள்ளைகளே! தேவ ஆவியானவர் நங்கூரமென்று கூறவில்லை அதற்குச் சமனான காரியங்களை எங்கள் வாழ்வில் நிறைவேற்றுவார். **உங்கள் வாழ்வை தேவனிடம் ஒப்புவித்தீர்களாயின் தேவன் உங்கள் வாழ்வை பாதுகாத்து தேவ ஆவியானவரின் மூலமாக முன்னோக்கிக் கொண்டு செல்வார். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் பரலோக தேவனே! உங்கள் பரிசுத்த தேவ ஆவியானவர் என்னில் இருக்கின்றார். வாழ்க்கைப் பாதையில் என்னை முன்னோக்கிக் கொண்டுச் செல்ல நீங்கள் எனது உள்ளம் அங்குமிங்கும் ஓடாதபடி கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே."
(ஏசாயா 48:17)

ஜீவ மன்னா
மார்ச்
**30** புதன்

**உகந்த காணிக்கையை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து ஆசீர்வாதங்களைப் பெறுங்கள்!**

வேதவாசிப்பு
சகரியா
அதி: 10 – 11

**"அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக."** (சங்கீதம் 20:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! நேற்றும், இன்றும், என்றும் மாறாத **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தினால் நேற்றைய தினத்திற்கும் அதிகமாக இன்றைய நாளில் தேவ கருணை உங்களுக்கு கிடைக்கும்படியாக வாழ்த்துகிறேன்.** எங்கள் தேவன் எங்களைக் குறித்து கூறியிருக்கிற எல்லா நன்மையான வசனங்களையும் நிறைவேற்றுவார். அப்படியே எங்கள் தேவன் நாம் ஒன்றை கேட்கின்ற வேளை **அது எமக்கு நன்மையாக இருப்பின் எமக்கு அதை பெற்றுத் தரும் தந்தையாவார்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட பிரதான வசனத்தில் எழுதியிருப்பது **"உமது மன விருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி உன் ஆலோசனைகளை-யெல்லாம் நிறைவேற்றுவார்"** என்றாகும். **(சங்கீதம் 20:4)** அப்படியே **சங்கீதம் 20:3**இல் **"நீர் செலுத்தும் காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து உமது சர்வாங்க தகன பலியைப் பிரியமாய் ஏற்றுக் கொள்வாராக"** என சொல்லப்படுகிறது. அதன் விளக்கம் என்னவெனில் நமது கிரியைகளையெல்லாம் தேவன் நினைக்கின்றார். நாங்கள் முழு உள்ளத்தோடு ஒன்றைச் செய்கின்ற வேளை தேவன் அதை ஏற்றுக் கொள்வார் என்றே. **விஷேடமாக ஆதியாகமத்தில் ஆதாம், மனைவி ஏவாள், அவர்களது புத்திரர்களான காயினும், ஆபேலும் தேவனுக்கு ஒப்புக் கொடுத்த காணிக்கைகளை பார்க்கும் வேளை காயீன் நிலத்தின் கனிகளையும், ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவற்றின் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். (ஆதியாகமம் 4ம் அதிகாரம்).**

தேவ பிள்ளைகளே! தேவ வசனத்தில் குறிப்பிடப்படுகின்றதாவது சில நாள் சென்ற பின்பு **காயின் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்கு காணிக்கையாகக் கொண்டு வந்தான் என்றாகும். ஆனால் தேவன் காயீனையும் அவன் காணிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை.** தேவ பிள்ளைகளே! ஆபேல் தேவனுக்கு பயத்தோடும், பக்தியோடும் அவர்களின் பிதாவான தேவனுக்கு எப்போதும் காணிக்கை ஒப்புக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். ஆனாலும் காயீன் அப்படியன்று **சில வேளைகளில் மாத்திரமே தேவனை நினைத்தான். அதை தேவன் ஏற்றுக் கொள்ளவில்லை.** நீங்கள் காயீனைப் போல் அல்லாது ஆபேலைப் போல் ஜீவியுங்கள். **நீங்கள் முழு உள்ளத்தோடும், தேவ பக்தியோடும் செய்கின்ற அனைத்து காரியங்களையும் தேவன் நினைத்து உங்கள் விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றுவார். ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் பரலோகப் பிதாவே! நான் முழு உள்ளத்தோடும், பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்களைத் தேடுகையில் நீங்கள் என்னில் பிரியமாயிருப்பீர்கள் என்றறிவேன். நீங்கள் என் ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவீர்களாக! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படிக்கு, அதை ஆசீர்வதித்தருளினீர்;..." (1 நாளாகமம் 17:27)

ஜீவ மன்னா
மார்ச்
31 வியாழன்

## நீண்ட காலமாக நீங்கள் தேடும் விடுதலையை தேவன் அறிகிறார்!

வேதவாசிப்பு
சகரியா
அதி: 12 – 13

**"படுத்திருந்த அவனை இயேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாகவேண்டுமென்று விரும்புகிறாயா என்று கேட்டார்."**
(பரி.யோவான் 5:6)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவனுடைய நாமத்தினால் இன்றும் உங்களுக்கு நன்மைகளோடு கூடிய நல்ல நாளே இம்மாதத்தின் இறுதி நாளான இன்று இம்மாதம் முழுவதுமாய் எம்மை வழி நடத்தின் தேவ கிருபைக்காய் நன்றியோடு தேவனை மகிமைப்படுத்துவோம்.** இன்றைய தினத்திலும் பிரச்சினைகளோட கவலைகள் நிறைந்த வாழ்வில் இன்றும் எனக்கு விடுதலை கிடைக்கவில்லையே என **கலங்குகிறீர்களா? இன்றைய நாளின் இச் செய்தி உங்களை ஆற்றும் கவலைப்படாதீர்கள்!**

தேவ பிள்ளைகளே! ஆத்மீகர்களாகிய எமக்குள் அநேக பலவீனங்கள், குறைகள், காணப்படலாம். மனிதர்களை பார்க்கிலும் எம் பரம பிதா எம்மைக் குறித்து சகலவற்றையும் அறிந்திருக்கிறார். **மனிதர்கள் வெளித்தோற்றத்தையும், எம் பலவீனங்களையும், குறைகளையும் சுட்டிக் காட்டி எம்மைக் கேவலமாக கதைக்கலாம்.** ஆனால் எம் ஆண்டவர் எம் ஆத்துமாவின் பலவீனத்தைக் கண்டு எம்மீது அனுதாபம் கொள்கிறார். **ஏசாயா 57:16**இல் அவரின் வார்த்தைகள் இப்படி கூறுகிறது **"நான் எப்போதும் வழக்காட மாட்டேன் நான் என்றென்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை ஏனென்றால் ஆவியும், நான் உண்டு பண்ணின ஆத்துமாக்களும் என முகத்துக்கு முன்பாகச் சோர்ந்து போகுமே"** என்பதாக.


தேவ பிள்ளைகளே! **பரி.யோவான் 5:6**இல் கூறப்பட்டிருக்கிறது **"முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்டிருந்த ஒரு மனுஷனைக் குறித்தாகும். அவன் எருசலேமில் ஆட்டு வாசலினருகே உள்ள பெதஸ்தா குளத்தருகே படுத்திருந்தான்." அவன் வெகுகாலமாக வியாதிஸ்தவனாய் இருப்பதை இயேசு கண்டு அவர் அவனிடம் போய் அவனை நோக்கி சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா? என்று கேட்டார். பிறகு அவனை நோக்கி எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான்."** என்று வசனம் கூறுகிறது. எருசலேமிலே அன்று அவனை சுகப்படுத்திய இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவனுள்ளவராய் இருக்கிறார். பிதாவானவர் உங்கள் நீண்ட காலமான பிரச்சினைகள், வியாதிகள், துன்பங்களை நன்கு அறிந்தவராய் இருப்பதால் உங்கள் மீது அனுதாபமுள்ளவராய் இயேசுகிறிஸ்துவின் மூலம் உங்களை இரட்சிப்பார். **ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

அன்பின் இரட்சகரே! வெகுகாலமாக என் வாழ்விற்கோர் விடுதலையை தேடுகிறதை அறிபவரே! நான் உங்களை விசுவாசிக்கின்றேன். இயேசுகிறிஸ்துவின் மூலம் எனக்கு விடுதலை அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்." (புலம்பல் 3:25)




சிலுவையில் பலியாகியது, மீண்டுமாக மரித்தோரிலிருந்து உயிர்த்து எழுந்தது என்பவைகள் உண்மையானவைகள் எனத் துணிகரமாக எடுத்துரைக்கும்படியாக கடந்த காலத்தில் இஸ்ரவேல் நாட்டுக்கு சென்றிருந்த போது இவைகள் அனைத்தையும் என் கண்களால் பார்க்கும் வரப்பிரசாதத்தை தேவன் தந்தருளினார். ஆகையால் மெய்யாகவே தேவ குமாரன் மனுவுருவில் இவ்வுலகில் அவதரித்து, சிலுவையிலே பலியாகி மரணத்தை வென்று மீண்டுமாக எழுந்தமையை நினைவு கூறும் நீங்கள் யாவரும் மிகவும் அதிர்ஷ்டசாலிகள்!



**உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இந்த அட்டைப்படக் கதையை வாசிக்கும் உங்கள் அனைவருக்கும் "வளமான எதிர்காலம் உருவாகட்டும்" என நான் பிரார்த்திக்கின்றேன்.**

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**போதகர் ஏ.ஜே.ஜோசப்**

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## 29 வருடங்களாக சீழ் வடிந்த காதுகள் சுகம்!



நிஷாந்த குமார
மினுவன்கொட

எனக்கு ஒரு வயதாக இருந்த போது நெல் மணிகளின் பதர்கள் பல என் காதினுள் சென்றமையால் 29 வருடமாக வலது பக்க காதிலிருந்து சீழ் வடிந்துக் கொண்டிருந்தது. 1999இல் 10வது சத்திரச் சிகிச்சை செய்து காதினுள் சென்ற 7 நெல் மணிகளின் பதரை அகற்றினார்கள். ஆனாலும் சீழ் வடிவது நிற்கவில்லை. 3 கிழமைகள் சுகமளிக்கும் ஆராதனைகளில் கலந்துக் கொண்டதன் பிறகு சீழ்வடிவது நின்று விட்டது. இயேசுவுக்கே நன்றி!

## 8 வருட வலிப்பு நோய் சுகம், எட்டு வருட இருதயத் துவாரம் மறைந்தது!




K.A. யமுனா சுதர்ஷனி (தாய்)
H.சரித் ஷெவான் (மகன்)
கிரிஉல்ல

என்னுடைய மகனுக்கு வயது எட்டு பிறந்த நாள் தொடங்கி வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டதோடு பிறப்பிலேயே நுரையீரலில் துவாரமும் இருந்தது. அவனுக்கு ஒரு மாதத்தில் 4 தடவைகள் வலிப்பு நோய் ஏற்படும். ஒவ்வொரு தடவையும் வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டியிருந்தது.

ஆனாலும் சுகமளிக்கும் ஆராதனையில் கலந்துக் கொண்ட முதல் நாளே அவனுக்கு 8 வருட வலிப்பு நோய் சுகமானது. இன்னுமாக வைத்தியர்கள் கூறியது பிள்ளை வளருகின்ற வேளை துவாரம் மறைந்து போகுமென்றாகும். சுகமளிக்கும் ஆராதனைகளில் கலந்து கொண்ட எட்டு கிழமைகளில் துவர்ரம் மறைந்து பூரண சுகமானதை வைத்திய பரிசோதனையின் பின் அறிந்துக் கொண்டோம். என் பிள்ளையை குணமாக்கிய இயேசுகிறிஸ்துவுக்கே நன்றி!

# இயேசு கைவிடார் தேவ சபை
## புதிய ஸ்தானத்திற்கு மாற்றப்பட்டுள்ளது...!





## இந்த ஊழிய வளர்ச்சியின் நிமித்தம் உங்களுடைய காணிக்கைகள், சந்தோஷக் கொடுப்பனவுகள்!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி,
கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு
பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்


போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N: QD/57/NEWS/2016

## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல:60/5, பேஸ்லயின் வீதி, கொழும்பு - 09. (பழைய டொயொடா நிறுவனம் அருகில்).
011-2334865 071-4922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org

இல:60/5, பேஸ்லயின் வீதி, கொழும்பு - 09 ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.